# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 பங்குனி17(31-03-1998)செவ்வாய்க்கிழமைUTHAYAN–A Lively National Tamil Daily கதிர்:106


## கல்விப் பணிப்பாளர் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் சு.இரத்தினராசா (வயது 56) நேற்றுப் பிற்பகல் இந்தியாவில் வேலூர் தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் மரணமானார்.

கடந்த சில மாதங்களாக ஈரல் நோய் சம்பந்தமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர், மேலதிக சிகிச்சைக்காக இரு வாரங்களுக்கு முன்னர் இந்தியாவுக்குக்கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

அவரது பூதவுடல் நாளை புதன்கிழமை நண்பகல் விமா

(10ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்கில் ஞாயிறு முதல் மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை

### ஹெலிகள் தாக்குதல்! போக்குவரத்து தடை!!

வடமராட்சி, மார்ச் 31

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மட்டுப்படுத்தப்பட்டஇராணுவநடவடிக்கை ஒன்றைத் தாங்கள் ஆரம்பித்திருப்பதாக யாழ். படை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும், முற்பகலும் அப்பிரதேசத்தில் பலத்த குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டன. ஹெலியிலிருந்து தாக்குதல்களும்இடம் பெற்றன.

வரணி, பளைப் பகுதிகளிலிருந்தே நாகர்கோயில் பிரதேசத்தை நோக்கிப்படையினர் நகர்ந்ததாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையை அடுத்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வடமராட்சி கிழக்குக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன.

முன்னேறும் படையணிகளுடன் புலிகள் எந்த இடத்திலும் மோதவில்லை என்றும் —

படையினரை எதிர் கொள்வதைப் புலிகள் தவிர்த்து வருகின்றனர் என்றும் —

இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (உ173-117-139-31-36)

## தந்தை செல்வா நூற்றாண்டு நிறைவு நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் நூற்றாண்டு நிறைவு நாள் இன்றாகும். இதனையொட்டிப் பல்வேறு நிகழ்வுகள் இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுத் தேசிய அவை ஒழுங்கு செய்துள்ள நிகழ்வுகள் காலை 9 மணிக்கு யாழ். கோட்டைக்கு அருகிலுள்ள தந்தை செல்வா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தீவிரமாகச் செயற்படுங்கள்!'

## தமிழ், இந்து அமைப்புகள் வாஜ்பாய்க்கு மகஜர்

கொழும்பு, மார்ச் 31

நீண்ட காலமாக நாட்டைப் பாரதூரமாக வதைத்து வரும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண துரிதமாகவும், ஆக்கபூர்வமாகவும், தீவிரமாகவும் செயற்படுங்கள்.

இலங்கையில் உள்ள தமிழ், இந்து அமைப்புக்கள் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த வேண்டுகோள் அடங்கிய — பிரதமர் வாஜ்பாய்க்கு முகவரியிடப்பட்ட — மகஜர் அவரிடம் கையளிக்கப்படுவதற்காகக் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

அகில இலங்கை இந்துமாமன்றம் மற்றும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றிய கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியே பிரதமர் வாஜ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜினாமா செய்ய மூப்பனார் முடிவு!



சென்னை, மார்ச் 31

இந்தியாவில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட மோசமான தோல்விக்குத் தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமாச் செய்யப்போவதாக அக்கட்சியின் தலைவர் ஜீ. கே. மூப்பனார் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வியாழனன்று தஞ்சாவூரில் நடைபெறவுள்ள தமிழ் மாநில காங்கிரஸின் செயற்குழுக் கூட்டத்தில் தமது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார். கட்சியின் புதிய தலைவரை செயற்குழு தெரிவு செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியத் தேசிய காங்கிரஸின் தமிழகப் பிரிவுடன் தமிழ் மாநில காங்கிரஸ் இணைக்கப்படுவது பற்றியும் மூப்பனார் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடையே இது குறித்து ஒத்த கருத்து ஏற்பட்டு அது கட்சியின் மேலிடத்துக்குத் தெரிவிக்கப்பட்ட பின்னர் நிலைமையைப் பொறுத்து முடிவு எடுக்கப்படும் — என்றும் மூப்பனார் கூறினார்.

(ஐ-9)

## பாடசாலை வளவில் குண்டு பொதி

மட்டக்களப்பு, மார்ச் 31

அம்பாறை திருக்கோயிலில் உள்ள பாடசாலை வளவு ஒன்றில் ரிவோல்வர், 2 கிரனேட்டுக்கள் அடங்கிய பார்சல் ஒன்றை விசேட அதிரடிப்படையினர் நேற்று மீட்டனர்.

அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடிய இளைஞர் ஒருவரே அந்தப் பார்சலை அங்கு வீசிவிட்டுச் சென்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21)

## கொழும்பில் நீர் தட்டுப்பாடு ஏற்படும்

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் நிலவிவரும் கடும் வரட்சியால் கொழும்பில் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்படலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நகரிற்கு நீர் வழங்குவதற்குப் பயன்படும் இரு பெரும் நீர்த்தேக்கங்களில் இன்னும் 80நாள்களுக்குப் போதுமான அளவு நீரே இருப்பதாகவும்-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 2 பெண்கள் உட்பட 7 பேர் களுத்துறையில் விடுவிப்பு!

திருகோணமலை, மார்ச் 31

யாழ். மாவட்டத்தில் கொடிகாமம் பகுதியில் கைது செய்யப்பட்டு கழுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு பெண்கள் உட்பட ஏழு பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நடராசா கமலாதேவி (வயது-32), அவரது மகளான நடராசா நகுலினி ஆகியோர் உட்பட தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு பேரும் கடந்த 23 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டு திருகோணமலையில் உள்ள உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட உள்ளனர்.

அதேசமயம் பேசாலை சிறையில் தடுத்துவைக்கப்பட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் புதைத்துள்ள கண்ணிகளை அகற்ற நிபந்தனையுடன் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடிகள், மிதிவெடிகளை அகற்ற சில நிபந்தனைகளுடன் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். ஏ. ஒபடகே இத்தகவலைத்தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் பல இடங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள், மிதி வெடிகள் மூலம் தினமும் மக்கள் பாதிக்கப்படுவதாக தகவல்கள் கிடைக்கின்றன.

இந்த மிதி வெடிகள், கண்ணி வெடிகளை அகற்ற ஐ. நா. திட்டத்தின் அதி

(10ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை நல்லெண்ணக் குழு வாகரை செல்ல அனுமதி மறுப்பு!

மட்டக்களப்பு, மார்ச் 31

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்குச் சென்றிருந்த தென்னிலங்கைக் குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வாகரைப் பகுதிக்குச் செல்ல ஏற்பாடாகியிருந்தது. எனினும் பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்காததால் அவர்கள் அங்கு செல்லவில்லை.

நல்லெண்ணக்குழுவினரை வரவேற்பதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கொக்கட்டிச் சோலையில் உள்ள மண்முனைத் துறையில் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

18 பேர் அடங்கிய இந்த நல்லெண்ணக் குழு நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளின் பிரமுகர்கள் இக்குழுவில் இடம்பெற்றனர்.

இக் குழுவினர் இரு பிரிவாகப் பிரிந்து மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, செங்கலடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள சமூக, சமய, அரசியல் பிரமுகர்களைச் சந்தித்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் இரத்தினராசா

சுப்பிரமணியம் இரத்தினராசா (கல்விப்பணிப் பாளர் வலயம் I) 30-03-98 அன்று இந்தியாவில் காலமானார். மரணச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு. கனகநாயகம்
(சகோதரர்)

88/7, பருத்தித்துறை வீதி,
குருநாதசுவாமி கோயிலடி,
யாழ்ப்பாணம். (54457)

---

அருட்சகோதரி
## விசிற்றேசன் (தி.கு.க.)
(Rev. Mother Visitation Whelan)

அயர்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தில் வேதபோதகப்பணியாற்றியவரும், திருக்குடும்ப சபையின் யாழ்ப்பாண மாகாணத்தின் முதல் மாகாணத் தலைவியாகப் பணியாற்றியவருமான அருட்சகோதரி விசிற்றேசன் கடந்த 27-03-98 அன்று அயர்லாந்தில் காலமானார்.

இவரது வாழ்வுக்காக நன்றி கூறி அவருக்காக வேண்டும் முகமாக நாளை (01-04-98) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் சிற்றாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டுமாறு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

தகவல்:
மாகாணத் தலைவி

தி.கு.க. மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம். (54439)

---

## நாகலிங்கம் அருணாசலம்
(Retd. P. W. D. Inspector)

காரைநகர் சின்னாலடியைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அருணாசலம் 29-3-98 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகலிங்கம், பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், கோகிலாம்பாள், Dr. பத்மினி (கனடா), நாகேந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டாக்டர் கருணானந்தம் (நனியார் வைத்தியசாலை, சாவகச்சேரி), டாக்டர் ஞானேஸ்வரன் (கனடா), இந்தியபுத்திரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி மகேஸ்வரி கனகசபாபதியின் (லண்டன்), அன்புச் சகோதரனும், கஜன் (A/L 99, பரியோவான் கல்லூரி), வரகுணன் (பரியோவான் கல்லூரி), நீரஜா (கனடா), செந்தூரன் (கனடா), சாயி ஐஸ்வர்யா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31-3-98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் சி. கருணானந்தம்
(மருமகன்)

34, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (54453)

---

திருமதி
## விஸ்வரட்ணம் நாகரட்ணம்

அளவெட்டி வடக்கு இலகடியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஸ்வரட்ணம் நாகரட்ணம் 30-03-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வரட்ணத்தின் அன்பு மனைவியும், திருமதி தெ. சரோஜினிதேவி, திரு. வி. சிவலோகநாதன் (கொழும்பு), திருமதி கு. சாந்தாதேவி, காலஞ்சென்ற திருமதி ப. வசந்தாதேவி, திருமதி சோ. சந்திராதேவி, செல்வி வி. சூரியகுமாரி, திருமதி சி. நிர்மலாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சி. தெட்சணாமூர்த்தி, திருமதி சி. ஜெகதீஸ்வரி, திரு. கு. குலசிங்கம், காலஞ்சென்ற திரு. பொ. பரராஜசிங்கம், திரு. அ. சோமபாலன், திரு ச. சிவனேசன் ஆகியோரின் அன்பு மாமியும், சி. ஆர்த்தி, சி. ருக்மாங்கன், சி. சாரங்கன், கு. கிரிதர், கு. சர்மிதா, ப. மயூரதன், ப. நிசங்கா, சோ. ரஜீவ், சோ. ஜெசிந்த், சி. வர்ணன், சி. ரிசாங்கி, சி. காயி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற திருமதி சரவணமுத்து மனோன்மணி (அத்தை)யின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31-03-98) செவ்வாய்க்கிழமை இலக்கம் 36, மாதம்பிட்டியா வீதி, கொழும்பு - 15 இல் நடைபெற்று பூதவுடல் மாலை4.30 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி ச. தெட்சணாமூர்த்தி
(மகள்)

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு. (54463)

---

## கிரிக்கெட் சபைத் தலைவர்

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் தெரிவில் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் —

திலங்க சுமதிபால போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

தலைவர் பதவிக்கு போட்டியிட்ட ஏ. ஜே. எம். முஸாதீன் போட்டியில் இறுதி நேரத்தில் விலகியதால் சுமதிபால தெரிவானார்.

இலங்கை அணியின் முன்னாள் வீரர் சாலிய அஹங்கம செயலாளராகத் தெரிவானார். [இ–10–3]

---


நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
31 - 03 - 98 முதல்
விக்னேஷ் - தேவயானி
நடித்த
காதலி
காட்சிகள். 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)

யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
கமல் - அர்ஜுன்
நாசர் - கௌதமி
நடித்த
குருதிப் புனல்
அடுத்த வெளியீடு
உள்ளத்தை
அள்ளித் தா
தினசரி:- 10 30, 2-30
தொ.பே. இ. 021 – 2999
(54425)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
வியாழன் வரை
சங்கர், நளினி
சந்திரசேகர் நடித்த
'ஒருதலை ராகம்'
நேரம்:- 10-30, 2-30
வெள்ளி முதல் சனி வரை,
காலை 10-30
எம்.ஜி.ஆர். நடித்த
படகோட்டி
மாலை 2-30
மதுரையை மீட்ட
சுந்தரபாண்டியன்
தொலை பேசி இல.
070 - 212223
(54347)



இதழ்: 2
வெளிவந்துள்ளது
* துர்க்கா - சுன்னாகம்
* ஆசீர்வாதம்-
* பரம்ஸ் - சாவகச்சேரி
* உதயம் - பருத்தித்துறை
* ஸ்ரீலங்கா -
* பூபாலசிங்கம்-
* மக்மில்லன் - யாழ்ப்பாணம்
கமலம் பதிப்பகம்
82, பிறவுண் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.
(54435)


---

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இரத்தினசபாபதி

கேண்டாவில் மேற்கு உப்புமடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா இரத்தினசபாபதி 28 — 03 — 1998 இல் கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தருமாவதியின் அன்புக் கணவரும், ரமேஷ், கணேஷ், குமரேஷ் ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற கந்தையா — பொன்னம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற திருநெல்வேலி நாகநாதர் — புஷ்பகாந்தி தம்பதியினரின் மருமகனும், இராசரத்தினம், கனகசபாபதி, குணரத்தினம் திருமதி பாக்கிய லக்குமி வேலாயுதம்பிள்ளை, திருமதி இராசலக்குமி பாலசிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் 30 — 03 — 1998 இல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கனகசபாபதி

கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய். ( 54464 )

---

## தம்பிமுத்து சோமசுந்தரம்
(இளைப்பாறிய ஆசிரியர்)

காரைநகர் பயரிக்கூடலைச் சேர்ந்த R.T.சோமசுந்தரம் 28-3-98 இல் மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து — தெய்வானை தம்பதிகளின் மூத்த புதல்வனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சுமங்கலை, சிவசோதி, சிவயோகம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான R. T. ஆறுமுகம், திருமதி செல்லம்மா மார்க்கண்டு ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற திரு. திருமதி வைத்திலிங்கம் சபாரத்தினத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29 - 3 - 98 இல் மலேசியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மார்க்கண்டு சுந்தரலிங்கம்
(மருமகன்)

பயரிக்கூடல்,
காரைநகர். (54441)

---

## திருமதி சீனியர் பாக்கியம்

காரைநகர் சந்தன்புளியடியைச் சேர்ந்த திருமதி சினியர் பாக்கியம் 29-03-98 அன்று ஸ்கந்தபுரம் கிளிநொச்சியில் காலமானார். இவர் காலஞ்சென்ற சீனியரின் அன்பு மனைவியும், சந்தையாவின் அன்புச் சகோதரியும், யோகமலர், றோசமலர், இராசமலர், கனகரட்ணம், இன்பமணி, சுப்பிரமணியம், செல்வநாயகம், இராசநாயகம், அருமைநாயகம், சுகிர்தமலர், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பாலசிங்கம், குணநாயகம், சிவபாதம், யோகானந்தன், சிவமலர், ரேணுகாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-03-98 அன்று கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சீ இராசநாயகம்
(மகன்)

60/6, இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (54461)

---

## முருகேசு இராஜேந்திரன்
(Tomy)

(ஓய்வுபெற்ற கணக்காளர், Gestetner Company)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், மன்னாரில் தற்காலிகமாக வசித்தவருமான முருகேசு இராஜேந்திரன் 27- 3 - 98 அன்று காலமானார்.

இவர் சந்திரகலாதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீ சுபோசினி, ஸ்ரீ ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 28 - 3 - 98 இல் மன்னாரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சந்திரா யோகரத்தினம்,
திருமதி லீலா குமாரகுலசிங்கம்
(சகோதரிகள்)

86, கச்சேரி – நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். (54462)

---

## கார்த்திகேசு ஜெயராஜ்

மல்லாகம் வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஜெயராஜ் டோகாவில் 29-03-98 அன்று அகால மரணமானார்.

அன்னார் விமலாவதி ஜெயராஜ் அவர்களின் (மக்கள் வங்கி சுன்னாகம்) அன்புக் கணவராவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம்பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி விமலாவதி ஜெயராஜ்

வங்கி ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு. (54458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசர் றணறிட் நேற்று கம்போடியா திரும்பினார்

## தலைநகரில் ஆதரவு- எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

நொம்பென் மார்ச் 81 கம்போடியாவின் முன்னாள் பிரதமர் இளவரசர் நொரடொம் றணரிட் நேற்று தலைநகர் நொம்பென் திரும்பினார்.

தாய்லாந்தில் இருந்து விசேட விமானம் ஒன்றில் இவர் அழைத்து வரப்பட்டார்.

இதே விமானத்தில் றணரிட்டுடன் ஐ. நா. அதிகாரிகள் சிலரும் வந்தனர்.

நொம்பென் விமான நிலையத்தில் இளவரசருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இளவரசருக்கு ஆதரவாக விமான நிலையத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் நகரின் பல பகுதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன,

ஜூலை 26 ஆம் திகதி கம்போடியாவில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் இளவரசர் றணரிட் பங்குபற்ற உள்ளார்.

தேர்தலில் பங்குபற்றுவதற்கு அவர் இணங்கியதை அடுத்தே அவரது தந்தையான கம்போடிய மன்னர் நொரடொம் சிஹானூக் அவருக்கு மன்னிப்பு வழங்கி இருந்தார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் இரண்டாவது பிரதமர் ஹூன்செனுடன் ஏற்பட்ட அதிகாரப் போட்டியை அடுத்து றணரிட் பதவி இழந்கது தெரிந்ததே.

முதலாவது பிரதமராக இருந்த றணரிட் வெளிநாடு சென்றிருந்த சமயம் ஹூன் சென் அவரை பதவி நீக்கம் செய்திருந்தார்.

பின்னர் அவருக்கு நீதிமன்றத்தில் ராஜதுரோக குற்றச்சாட்டின் பேரில் மரணதண்டனை திர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. (இ)

## உலக அரங்கில்

## பாரதீய ஜனதா அரசு நிலைக்க மகா யாகம்

வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி அரசு நிலைப்பதற்காக டில்லியில் வெள்ளிக்கிழமை மகாயாகம் நடத்தப்பட்டது.

பாரதீய ஜனதா கட்சியின் முக்கியதலைவர்கள் இந்த யாகத்தில் கலந்துகொண்டனர்.

தனது அரசின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை மக்களவையில் வாஜ்பாய் தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் இந்த யாகம் தொடங்கியது.

தர்மயாத்திரை மகா சங்கம் என்ற அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட இந்தயாகத்தில் விஸ்வ ஹிந்துபரிஷக்சேவா பாரதி, சனாத தர்ம பிரதிநிதி சபைராம்லீலா மகா சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களும் கலந்துகொண்டன.

பஞ்ச தேவ பூஜை வியாழக்கிழமை இரவு நடந்தது. வெள்ளிக்கிழமை காலை நடந்த ருத்ராபிஷேக பூஜையில் 108 தம்பதியர் கலந்து கொண்டனர். பாரதீய ஜனதா கட்சியின் நாடாளுமன்றச் செயலர் ராஜேந்திர சர்மா பூஜை நடத்தினார். நாள் முழுவதும் இந்த பூஜை நடந்தது.

பாரதீய ஜனதா தலைவர் மதன்லால் குரானா, கே. எல். சர்மா, கேதர்நாத் சகானி, டில்லி முதல்வர் சாகிப்சிங் வர்மா, அத்வானியின் மனைவி கமலா அத்வானி, மகள் பிரதிபா உள்ளிட்டோர் பூஜையில் கலந்துகொண்டனர். (இ-10)

# வெடி மருந்துத் தொழிற்சாலைகள் காஸா பகுதியில் கண்டுபிடிப்பு

## 10 பலஸ்தீனர்கள் கைதாகினர்

ஜெருசலம், மார்ச் 31 பலஸ்தீனப் பொலீஸார் கடந்த வாரம் காஸா பகுதியில் ஏழு பெரிய வெடிமருந்துத் தொழிற்சாலைகளைக் கண்டு பிடித்தனர்.

இவை இஸ்ஸாமிய தீவிரவாத அமைப்பான ஹாமஸ் இயக்கத்துக்குச் சொந்தமானவை என்று சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வெடிமருந்துத் தொழிற்சாலை முற்றுகையின் போதுஹமாஸ் இயக்கத்தைச் சோந்த பத்துப் பேர் கைது செய்யப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நூற்றுக்கும் அதிகமான கைக்குண்டுகள், கவசவாகனங்களை அழிக்கப்பயன்படுத்தப்படும் ஏவுகணைகள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒரே தடவையில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## மிதிவெடி தடை ஒப்பந்தம்

மிதிவெடிகளை உலகளாவிய ரீதியில் தடை செய்வது தொடர்பாக ஹங்கேரியில் நடந்து வரும் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இதில் கைச்சாத்திடுவதற்கு தயக்கம் காட்டி வரும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைக்கும் நடவடிக்கைகள் வெற்றி பெற்று வருவதாகக் கூறப்படுகிறது. [இ-9]

# பெரு விமான விபத்தில் 28பேர்கொல்லப்பட்டனர்

பெரு, மார்ச் 31 பெரு நாட்டின் விமானப் படை விமானமொன்றுவிபத்துக்குள்ளானதில் சுமார் 28 பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் உயிர் தப்பினர். 18 பேரை காணவில்லை.

63 பயணிகளை ஏற்றி வந்த இந்த விமானம் கியூபா விமான நிலையத்துக்கு வெகு அருகில் வெள்ளம் நிரம்பிய கால்வாய் ஒன்றுக்குள் விழுந்து உடைந்ததாக மக்கள் தெரிவித்தனர்.

முன்னதாக கடந்த சனிக்கிழமை பெரு நாட்டின் அமெசன் காட்டுப்பகுதியில் ஏராளமான பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று ஆற்றில் மூழ்கியதில் குறைந்தது 30 பேர் உயிரிழந்திருந்தனர். (இ-8)

## முத்தம் கொடுப்பதில் தம்பதியர் சாதனை

நியூயோர்க் மார்ச் 31

அமெரிக்காவில் ஒரு தம்பதியர் 29 மணிநேரம் இடைவிடாது முத்தம் கொடுத்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த முத்தம் கொடுக்கும் போட்டி கடந்த வியாழக்கிழமை நடந்தது. ஒன்பது தம்பதியர் இதில்கலந்து கொண்டனர்.

உதடுகளை உதடுகளோடு பதித்தபின் ஒரு வினாடி கூட அவற்றை எடுக்கக் கூடாது. நின்று கொண்டேதான் இருக்க வேண்டும். இடைவேளை எதுவும் கிடையாது என்பன போடியின் விதிகள்.

மிச்சிகனைச் சேர்ந்த ராபாடோ, மார்க்கிரிஸ் ஒல்டு தம்பதியர் 29 மணிநேரம் தொடர்ந்து முத்தம் கொடுத்த போட்டியில் வென்றனர்.

முத்தம் கொடுப்பதில் 16 ஆண்டுகளாக நாங்கள் தொடர்ந்து பயிற்சி செய்து வருகின்றோம். அதன் பலனாகத்தான் வெற்றி பெற்றோம். என்று அந்தத் தம்பதியர்கூறினர்.

நியூ ஆர்வின்ஸைச் சேர்ந்த சிக் லாமர் கார்ட, மென்தியா கிளார்க் தம்பதி இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.

தொடர்ந்து முத்தம் தருவதால் கால்வலி, வாந்தி உணர்வு போன்றவை ஏற்படுவதாக போட்டியில் கலந்து கொண்ட சில தம்பதியர் கூறினார். (இ-10)

## தெலுங்கு தேச அமைச்சர் பதவியைத் துறந்தார்

ஆந்திர மாநில பெரும் தொழில்கள் துறை அமைச்சர் பசுருதீன் பாபுகான் அமைச்சரவையில் இருந்து தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

மத்தியில் பாரதீய ஜனதா தலைமையிலான அரசுக்கு ஆதரவாக தெலுங்கு தேசம் கட்சி வாக்களித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தாம் பதவி விலகுவதாக அவர் தெரிவித்தார். (இ-9)

## இந்தியாவின் புதிய அரசுடன் ஒத்துழைக்க பாக். தயார்!

இஸ்லாமாபாத், மார்ச் 31

இந்தியாவின் புதிய அரசாங்கத்துடன் நெருங்கிய விதத்தில் ஒத்துழைப்பு வழங்க உள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் இதே விதமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இரு அயல் நாடுகளுக்கிடையிலும் நெருங்கிய ஒத்துழைப்பையும், சாமாதானத்தையும், நட்புறவையும் ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையில் பாரதீய ஜனதாக் கட்சி அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான உரிமையைத் தான் கொண்டிருக்க வேண்டும் என்று தெரிவித்திருப்பதை இஸ்லாமாபாத்திலுள்ள வெளிவிவகார அமைச்சிலுள்ள பேச்சாளர் ஒருவர் கவனத்தில் எடுத்துள்ளார்.

இது பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் —

உலக சமூகம் இதனைத் தடுக்க முன்வர வேண்டும் எனவும் — பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் கேட்டுள்ளார்.

பதற்ற நிலையைக் குறைத்து சச்சரவுக்கு காரணமாக இருக்கும் அம்சங்களை நீக்கும் முகமாக இரண்டு நாடுகளுக்குமிடையில் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இரு ஜனாதிபதிகளும் பரிமாறிக் கொண்ட செய்திகள் தெளிவுபடுத்தியுள்ளன. (இ-9)

# சேடப்பட்டியை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

## தவறினால் பிடி ஆணை

சென்னை, மார்ச் 31 மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சேடபட்டி முத்தையா எதிர்வரும் 6 ஆம் திகதி கண்டிப்பாக நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று சிறப்பு நீதிபதி எஸ். சம்பந்தம் உத்தரவிட்டுள்ளார்.

வருமானத்தை விட கூடுதலாக ரூ. 47 லட்சம் சொத்து சேர்த்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முத்தையாவின் மனைவி, இரு மகன்கள், மகள் ஆகியோர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டைப் பதிவு செய்ய மார்ச் 26 ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அவர்கள் வரவேண்டுமென நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் முத்தையா தவிர அவரது குடும்பத்தினர் மட்டும் வந்தனர்.

''மக்களவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடக்கவிருப்பதால் முத்தையா டில்லியில் இருக்கிறார். அதனால் நீதிமன்றத்துக்கு அவர் வரவில்லை'' என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்தார்.

முத்தையா மற்றும் அவரது குடும்பத்தினர் சார்பில் ஒரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டது.

1977முதல் சட்டப்பேரவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர், பேரவைத் தலைவர் பதவிகளை முத்தையா வகித்துள்ளார். அப்போது அவருக்கு கிடைத்த சம்பளத்தையும் வருமானத்தில் சேர்க்க வேண்டும். இது குறித்து பேரவைச் செயலாளர், மக்களவைச் செயலாளரிடமிருந்து ஆவணங்களை வரவழைக்க வேண்டும் என்று அம்மனுவில் கூறப்பட்டிருந்தது.

முத்தையாவின் மனைவி, இரு மகன்கள் மற்றும் மகள் பெயரில் உள்ள சொத்துக்களுக்கும் அவருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் மனுவில் கூறப்பட்டிருந்தது.

முத்தையாவின் தந்தை ராமசாமி தேவர் வாங்கிய சொத்துக்கள்தான் இவை என்று அவரது குடும்பத்தினர் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

''வழக்கைத் தாமதப்படுத்துவதற்காக இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 1991 முதல் 1995 வரையிலான காலத்தில் வருமானத்தைவிட அதிகமாக முத்தையா சொத்து சேர்த்தார் என்பது வழக்கு. எனவே அவர் பேரவைத் தலைவராக இருந்த காலத்தில் கிடைத்த சம்பளம் பற்றிய விவரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன'' என்று அரசு வழக்கறிஞர் கூறினார்.

இவ்வழக்கின் விசாரணையை ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

''அன்றைய தினம் முத்தையா உட்பட அனைவரும் நீதிமன்றத்துக்கு வரவேண்டும். மிக முக்கியமான காரணங்களால் முத்தையா வர முடியாவிட்டால், வேறொரு திகதிக்கு அவகாசம் தருவேன். இல்லையெனில் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிப்பேன் என்றார் நீதிபதி. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிரதான கட்சிகளுக்கு அழுத்தம் தரவேண்டும்

## தெற்கு நல்லெண்ணக்குழுவிடம் வலியுறுத்து

மட்டக்களப்பு, மார்ச் 31

இந்த நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இதற்கு இரு பிரதான தேசியக்கட்சிகளிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த நல்லெண்ண விஜயம் மேற்கொண்டுள்ள உள்ளூராட்சித் தலைவர் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

கிழக்கே விஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு நல்லெண்ணக் குழுவிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சித் தலைவர்களுடன் நடந்த சந்திப்பிலேயே இப்படி வலியுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் பேரின்பநாயகம் பேசுகையில், இனப்பிரச்சினை தீர்வுக்கு தடையாக இருக்கும் இரு தேசியக் கட்சிகளையும் யதார்த்த பூர்வமாகச் சிந்திக்க வைக்க நல்லெண்ணக் குழுவினர் முயல வேண்டும் என்றார்.

காத்தான்குடி பிரதேச சபைத்தலைவர் முகமட் காசீம் பேசுகையில், ''விடுதலைப்புலிகள் சயனைட் குப்பிகளை கழுத்தில் கட்டிக் கொண்டுளதற்காகத்தியாகம் செய்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். அற்பசலுகைகளை வழங்கி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது'' என்றார்.

ஆரையம்பதி பிரதேச சபைத் தலைவர் றொபேட் நவரத்தினராசா பேசுகையில், ''விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடை இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது'' என்று கூறினார்.

மாத்தறை அக்குரசபிரதேசசபைத் தலைவர் பதில் அளித்து உரையாற்றுகையில் தமிழ்மக்கள் படும் இன்னல்களை யதார்த்த பூர்வமாக உணர்ந்து தெற்கே எடுத்துச் செல்ல எமது விஜயம் உதவும். சிறுமுயற்சியாக தெற்கில் இருந்து வந்துள்ள நாம் எம்மால் முடிந்தளவு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவுவோம்'' என்றார்.

(இ-7-3)

## யாழ் பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சிக் கல்வி டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்பயிற்சிக் கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.

யாழ். மாட்டத்தில் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த கற்கைநெறியை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவை வற்புறுத்தி வந்தார்.

முழுநேர இரு வருடகாலத்துக்கான இந்த கற்கை நெறிக்கு 50 பேர் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்னர்.

இந்த கற்கைநெறிக்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு விட்டது. அடுத்த மாதத்தில் இந்த கற்கை நெறிக்கு ஆள்களைச்சேர்க்க விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெற்ற 28 வயதுக்கு உட்பட்டவர்கள் இந்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். அரச ஊழியர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க வசதியாக அவர்களுக்கான வயதெல்லை தளர்த்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம்— இந்த கற்கை நெறியைப் போதிப்பதற்கான வள ஆளணியினர்களை திரட்டுவதில் பிரச்சினை எதிர்நோக்கப்படுவதாகத் தெரியவந்தது.

(இ-3)

# ஆண்டு 1 அனுமதிபெறும் மாணவர் தொகை குறைவு

கொழும்பு, மார்ச் 31

பாடசாலைகளில் ஆண்டு 1- க்கு அனுமதிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

1995 ஆம் ஆண்டில் ஆண்டு 1- க்கு 3 லட்சத்து 30 ஆயிரத்து 426 மாணவர்களும்—

1996 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 22 ஆயிரத்து 686 மாணவர்களும் —

1997 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 15 ஆயிரத்து 264 மாணவர்களும் அனுமதி பெற்றுள்ளனர்.

இந்த எண்ணிக்கைகளில் வடக்கு—கிழக்கு மாணவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை.

இவ்வாண்டில் ஆண்டு1-க்கு 3 லட்சத்து 8 ஆயிரத்து 13 பேர் அனுமதி பெற்றுள்ளனர்.

(இ-10)

# விஜயபால மெண்டிஸ் குறித்து இன்று முடிவு

கொழும்பு, மார்ச் 31

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளரும், கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விஜயபாலமெண்டிஸ் குறித்து இன்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஐ. தே. கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடைபெறவுள்ள இன்றைய கூட்டத்தில் விஜயபாலமெண்டிஸின் குடியுரிமையைப் பறிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் குறித்தும் ஆராயப்படும் எனவும் இக்கூட்டத்தில் விஜயபால மெண்டிஸ் விசேட உரையாற்றுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதைக் கைவிடுவது தொடர்பான அறிவிப்பும் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது,

(இ-10)

# மேலதிக பஸ்களின் உதவியுடன் பஸ் சேவை விரிவுபடுத்தப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அண்மையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபைககு கிடைத்த பஸ்களைக் கொண்டு புதிய பஸ் சேவைகள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

பருத்தித்துறை — சாவகச்சேரி — 2 பஸ்கள்

யாழ்ப்பாணம் — பொன்னாலை — 2பஸ்கள்

அராலி — துர்க்காபுரம் — ஒரு பஸ் என்ற ரீதியில் பஸ் சேவை விஸ்தரிக்கப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து தனங்கிளப்பு, கொடிகாமம், மாதகல், சில்லாலை, மானிப்பாய், அம்பனை, குரும்பசிட்டி, அச்சுவேலி, துர்க்காபுரம் ஆகிய பகுதிகளுக்கும் ஒவ்வொரு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள இடங்கள் தொடர்பாக பொது மக்கள் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம் என வட பிராந்திய போக்குவரத்துச்சபைப் பொது முகாமையாளர் சொக்கலிங்கம் அறிவித்துள்ளார்.

(இ-8-9)


## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள உத்தியோகத்தர்
திரு. எஸ். கே. தங்கவடிவேல்
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
**செல்லம்மா குமாரசாமி**
(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்கள் 27 – 03 – 98 இல் கண்டியில் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆதமா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ், விலை மதிப்பீட்டுத்
திணைக்கள ஊழியர்களும்
நலன்புரி சங்கமும்.

148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(54438)



## விற்பனையாகிறது

17 - 04 - 98 இல் நிகழும் சனிமாற்றத்துக்குரிய நாட்டுப் பலாபலன்கள், பன்னிரு இராசிகளுக்குரிய பலாபலன்கள் அடங்கிய புத்தகம் விற்பனையாகிறது. எங்கும் கிடைக்கும்.

விலை ரூபா 20/-

வெளியீடு:
**திருக்கணிதநிலையம்**
மட்டுவில், சாவகச்சேரி.

54440]



வெளிவந்து உள்ளது

## நாமும் சுற்றாடலும்

புதிய பாடத்திட்டம்

புலமைப்பரிசில்
மாணவருக்கு
சிறந்த
வழிகாட்டி

**வினா – விடைகள்**

பொது அறிவுக் கேள்விகளையும்
விடைகளையும் உள்ளடக்கியது.
இலகுவாக மீட்டல் செய்யக்கூடியது.

வெளியீடு:
**சுப்பிரமணிய புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

[54443]



## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்





அமரர் வினாசித்தம்பி வைரமுத்து
(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர்)

தோற்றம்: 22 — 07 — 1923
மறைவு: 24 — 03 — 1996

அமரர் வைரமுத்து திலகநாதன்
(தொழில் நுட்பவியலாளர்,
National Apprentice Board)

தோற்றம்: 06 — 05 — 1956
மறைவு: 31 — 03 — 1996

ஆண்டுகள் இரண்டு பறந்தோடிப் போனாலும்
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:

குடும்பத்தினர்

''சிவபவனம்'',
சாரையடி, புலோலி.

(சி-3255)



யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால்
நடத்தப்படும்

## தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம்

அவர்களின்

**ஜனன நூற்றாண்டு வழிபாடு**

அன்னாரது வாழ்வுப் பணிக்கு இறைவனுக்கு
நன்றி செலுத்தும் வழிபாடு.

சுண்டுக்குளி
புனித யோவான் தேவாலயத்தில்
31 – 03 – 1998 செவ்வாய்க்கிழமை
பி. ப. 4. 00 மணிக்கு நடைபெறும்.

பாராட்டுரை: வண. சேவக் சாம் அல்பிரட்
அருளுரை: வண. சி. கருணைராஜ்
மெதடிஸ்த திருச்சபைத் தலைவர்–
வடகிழக்கு

இவ்விசேட வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வண. சொ. மில்ரன்
கௌரவ செயலாளர்,
யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.

(54445)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பேரவையை மீண்டும் உருவாக்குவதற்கு கூட்டணி முயற்சி

கொழும்பு, மார்ச். 31 தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர் பேரவையை இயங்க வைப்பது சம்பந்தமாக 'இளைஞர் குழாம் ஒன்று அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்துடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதையடுத்து இளைஞர் பேரவையை மீண்டும் இயங்க வைக்க முடிவு செய்யப்பட்டதாக தமிழர் விடுதலைக் கூட்டணி செய்திக் குறிப்பு ஒன்று தெரிவித்தது.

தலைவர் எம். சிவசிதம்பரத்தின் ஆலோசனை அறிவுரைகளை ஏற்று எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை 5. 30 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையகத்தில் பேரவையை அங்குரார்ப்பணம் செய்ய ஏற்பாடாகியுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# அரச மொழி ஆணைக்குழு இயங்க வைக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 31 கடந்த டிசம்பருடன் செயலிழந்த அரசமொழி ஆணைக் குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் எம். சிவசிதம்பரம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழு செயலிழந்து மூன்று மாதங்களாகியும் அதைச் செயற்படுத்த அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

(இ-10-3)

# திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் ஆக்கங்கள் அடங்கிய பொருள்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 31 அனைத்து திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்களினது ஆக்கங்களை உள்ளடக்கிய பொருள்காட்சி ஒன்று யாழ். நகரில் நடத்தப்பட உள்ளது.

''நன்மதிப்பும் விலைப்படுத்தலும்'' என்ற தலைப்பில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நான்காம் திகதி முதல் எட்டாம் திகதி வரை நடைபெற உள்ளஇப் பொருள்காட்சியில் அனைத்து திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் உற்பத்திகள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

பனை அபிவிருத்திச் சபை இந்தப் பொருள்காட்சிக்காக தமது உற்பத்திகளை அனுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பனை அபிவிருத்திச் சபை தனதுபுதிய ஆராய்ச்சி மூலம் தயாரிக்கப்பட்ட பொருள்களையும், நவீன கைத்தொழில் முறையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்த பொருள்களையும் இந்தப் பொருள்காட்சிக்கு அனுப்ப உள்ளது. (இ-9)

# அறிக்கை தயாரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31 அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் இந்த வருடத்துக்கான நுண்கருத் திட்டம் பற்றிய அறிக்கை தயாரிக்கும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

பிரதேச செயலர்கள் தமது பிரதேசத்திலுள்ள கிராம மட்ட பொது அமைப்புக்களினதும் குடியிருப்பாளர்களினதும் பங்களிப்புடன் இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(இ-9)

## திருமலையில்

# ஓட்டோக்களைக் கட்டுப்படுத்தும் விதத்தில் புதிய நடைமுறை

திருகோணமலை, மார்ச் 31 திருகோணமலை மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களுக்கு கட்டுப்பாடு விதிக்கும் நடைமுறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

திருகோணமலை ஜெயசுமண ராஜா விகாரையில் நேற்று படையினரால் நடத்தப்பட்ட கூட்டத்தில் இந்தப் புதிய நடைமுறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையின் படி —

நகரில் ஓட்டோக்கள் நிறுத்த ஒதுக்கப்பட்டுள்ள இடங்களிலேயே ஓட்டோக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் —

நகரை விட்டு வெளியிடங்களுக்கு செல்லும் ஓட்டோக்கள் அன்றே திரும்ப முடியாது விட்டால் செல்லும் இடத்தில் உள்ள பொலீஸ் நிலையத்தில் பதிவு செய்துவிட்டு அங்கு தங்கலாம் என்றும் —

பொலீஸ் ஊடாக சகல ஓட்டோக்களும் இராணுவத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் — ஓட்டோ உரிமையாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஓட்டோக்களை பதிவுசெய்ய விண்ணப்பப்படிவங்களும் நேற்று விநியோகிக்கப்பட்டன.

(இ-3)

# வவுனியா நூலகம் திறப்பு விழா

வவுனியா, மார்ச் 31 வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் கொண்ட நூலகம்எதிர்வரும் 3 ஆம் திகதி திறந்துவைக்கப் படவிருக்கிறது.

இரண்டு கோடி 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த நூலகம் வடக்கு - கிழக்கில் பெரிய நூலகமாக அமைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகர சபைத் தலைவர் ஜி. ரி. லிங்கநாதன் நூலகத்தை திறந்து வைப்பார்.

(இ-3)

# எழுத்துப் பரீட்சை நடத்தாமல் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

## ஆராயப்படுவதாக மகாசிவம் தகவல்

கொழும்பு, மார்ச் 31 எழுத்துப் பரீட்சை நடத்தாமல் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் சாத்தியம் பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

இலங்கைத்தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எழுத்துப்பரீட்சை வைத்து அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவது தொடர்பான பிரச்சினை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர், மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் தனித்தனியே நடத்திய பேச்சுக்களின் பின்னர் இத்தகவலை வெளியிட்டார்.

எழுத்துப் பரீட்சையை நடத்துவதைத் தவிர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சம்பந்தப்பட்டவர்கள் தமக்கு உறுதியளித்ததாகவும் —

எனவே ஆசிரிய நியமனம் கோரி விண்ணப்பித்த பட்டதாரிகள் இது தொடர்பாக மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைக்கும் படியும் மகாசிவம் வேண்டுகோள் விடுத்தார்.

போட்டிப்பரீட்சை நடத்துவதைத் தவிர்க்கும் முயற்சிகள் தோல்வியுறுமானால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் ஏனைய ஆசிரிய தொழிற் சங்கங்கள் நடத்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் தோளோடு [illegible] என்று மகாசிவம் தெரிவித்தார்.

(இ-10)

# தேசிய துணைப்படைவீரர் மோதலில் மரணம்!

மட்டக்களப்பு தளவாய் இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பாக தலைமறைவாகியிருந்த தேசிய துணைப்படை வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

புவனேஸ்வரி செபஸ்ரியான் (34 வயது) அவரது மகள் சுபாஷினி (8வயது) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இடம்பெற்ற இக் கொலைகள் தொடர்பாக சிங்கராஜா கண்ணன் என்ற தேசிய துணைப்படை வீரர் தேடப்பட்டு வந்தார்.

இவரது நடமாட்டம் குறித்து கிடைத்த தகவலையடுத்து தளவாய்க் கிராமத்துக்கு தேசிய துணைப்படை விரைந்தது.

அந்நேரம் இடம்பெற்ற மோதலில் அவர் கொல்லப் பட்டார் எனதெரிய வருகின்றது. (இ-21)

# மலேரியா நுளம்பை ஒழிக்க புதிய நுளம்புச் சுருள்

நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கு மலேரியா நோய்த் தடுப்பு இயக்கம் புதிய வழிமுறை ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

பேணித்திரேன் என்ற விசேட இராசாயனப் பொருள் கொண்ட நுளம்புச் சுருளை இந்த அமைப்பு அறிமுகம் செய்துள்ளது.

இந்த நுளம்புச்சுருள் புகையினால் மனிதருக்கு எந்த பாதிப்பும் ஏற்படமாட்டாது என்றும்—

அனோபிலிஸ் நுளம்பு மாத்திரமே கொல்லப்படும் எனவும்— அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது மிகவும் பாதுகாப்பான நுளம்புச்சுருள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் சான்றிதழ் வழங்கியுள்ளது.

# கூட்டணி உறுப்பினருக்கு வட்டாரங்கள் ஒதுக்கீடு

யாழ். மாநகர சபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் பதவியேற்றுள்ள ஏழு உறுப்பினர்களுக்கு வட்டாரங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன.

ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ள வட்டாரங்களின் பணிகளை அவர்கள் மேற்கொள்ள மாநகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் பொதுவான பணிகளை மேற்கொள்வார்.

உறுப்பினர் விவரமும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வட்டாரங்கள் விவரமும் வருமாறு;

★ த. திருநாவுக்கரசு — ரயில் நிலையம் (14), கைலாசபிள்ளையார் கோயில் (15), கந்தர்மடம் (16).

★ வ. பரமசிவம் — நல்லூர் (12) சுண்டுக்குளி (13)

★ திருமதி டொ.எஸ் பிரியல் — கொய்யாத் தோட்டம் (6), பாஷையூர் (7), கொழும்புத்துறை (8).

★ செ. கந்தையா — அரியாலை கிழக்கு (9), அரியாலை மேற்கு (10), கலைமகள்(11).

★ செ. விஜயரட்ணம் — கோட்டை (1), பெரியகடை (18), புதிய சோனகத்தெரு (19), நாவாந்துறை (20)

★ அ. பிலிப் — குருநகர் மேற்கு (2), குருநகர்கிழக்கு (3), பேராலயம் (4).

★ சி. கௌரிசுதன் — வைத்தியசாலை (17), பழைய சோனகத்தெரு(21), நாவாந்துறைமேற்கு (22), நாவாந்துறை கிழக்கு (23).

# செய்திக் கொத்து

## மதகு சேதம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 31 கந்தரோடையில் இருந்து உடுவில் செல்லும் கந்தையா உபாத்தியாயர் வீதியில் பெரிய குளத்தின் மதகு ஒன்று சேதமடைந்து பல நாள்களாக கவனிப்பாரற்றுக்கிடக்கின்றது.

பல பொதுசன அமைப்புக்கள் இதனை சுட்டிக்காட்டியும் உரியவர்கள் ஏற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என குறை கூறப்படுகின்றது.

பாடசாலைப் பிள்ளைகள், விவசாயிகள் மற்றும் பொது மக்கள் இம்மதகு உடைந்து சேதமடைந்திருப்பதால் பெரிதும் சிரமப்படுகின்றனர். [இ-152]

## கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்படுகின்றன

வடமராட்சி, மார்ச் 31 பருத்தித்துறை நகர சபைப் பகுதிக்குள் கட்டாக்காலி நாய்கள் தற்போது பிடிக்கப்பட்டுவருகின்றன. பருத்தித்துறை நகரசபைத் தலைவர் விஜயரட்ணத்தின் பணிப்புக்கமைய கட்டாக்காலி நாய்கள் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

[இ-173]

## இறங்குதுறை புனரமைப்பு

நெடுந்தீவு, மார்ச் 31 நயினாதீவு இறங்குதுறை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் முன்புற வீதிகள் தற்சமயம் மீளப்புனரமைக்கப் படுகின்றன. இதற்கான நடவடிக்கைகளை புங்குடுதீவு— நயினாதீவு ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி க. இராஜரட்ணம் மேற்கொண்டுள்ளார்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக உற்சவம் நாளை புதன்கிழமை நடைபெற உள்ளதால் அதற்கு முன்னதாக இறங்குதுறை, முன்புற வீதி என்பனவற்றின் வேலைகள் பூர்த்தியடைந்து விடும் எனவும் தெரிகிறது.

[இ-111]

## மினிபஸ் சோதனை

தென்மராட்சி, மார்ச் 31 தென்மராட்சி மினிபஸ் சங்கத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் அனைத்து மினிபஸ்களும் பொலீஸாரினால் பரிசோதனை செய்யப்படுகின்றன. தொடர்ந்து சேவையில் ஈடுபடுவதற்கு தகுதியானவையென பொலீஸாரினால் சிபார்சு செய்யப்படும் மினிபஸ்களே இனி சேவையில் ஈடுபடுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 31 யாழ். மாவட்டத்திலுள்ள சிறுவர் நலன்களைப்பேணும் பொருட்டு தேசிய ரீதியில் சிறுவர் சாசனம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பான கருத்தரங்கு ஒன்று எப்ரல் 4 ஆம் திகதி யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியமும், யாழ். செயலகமும் இணைந்து நடத்துகின்றன. (இ-5-ரி)

## புதிய பாதை

யாழ்ப்பாணம், மார்ச் 31 யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு நுழைவாயில்- ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவுக்கு முன்னால் அமைந்துள்ள பாதை- பொதுமக்கள் பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலாக, பொலீஸ் பிரிவுக்கு அப்பால் அமைந்திருந்த இதுவரை பாவனையின்றி மூடப்பட்டிருந்த நுழைவாயில்- திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (இ-15)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31 சைக்கிளை நிறுத்திவிட்டு கடை ஒன்றினுள் பொருள் வாங்கச் சென்ற வேளை ஒருவரின் சைக்கிள் அபகரித்துச் செல்லப்பட்டது.

திருநெல்வேலி ஆடியபாதம வீதிப்பகுதியில் சந்தைக்கு அண்மையாக உள்ள ஒரு கடைக்கு முன்பாகவே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது. (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பல இன கலர் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- (நண்பகல் 12.00 மணியில் இருந்து பார்வையிடலாம்) A. அருளானந்தம் (குட்டி), 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்ஒழுங்கை) (54390)

### வாங்கப்படும்

Sony (20 20), (2032) (2030) போன்ற நல்ல ரி.வி. (TV)கள் சொந்தப் பாவிப்பில் இருப்பதென்ற அத்தாட்சியுடன்விற்க விரும்பினால் வாங்கப்படும். உதிரிப்பாகங்களுக்காக பழுதடைந்தரி.விக்கள் வாங்கப்படும். தொடர்பு: வீனஸ் தனபாலசிங்கம், B. Sc. Cey. Dip. in Electronic Engineering, London (நாக விகாரை முன்பாக). [சி/3223]

### திருத்த வேண்டுமா?

ரி. வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B. Sc. Ceylon, Dip. In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3069]

### தவறிவிட்டது

சிறீஸ்கந்தராஜா கார்த்திகன் என்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனின் விசேட அடையாளஅட்டை 16-03-98 அன்றுபாடசாலையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கல்லூரி அதிபரிடம் அல்லது 5/3, ஆஸ்பத்திரி ஒழுங்கை, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (54432)

### தேவை

சென்னை சைவசித்தாந்தப் பெருமன்றம் பதிப்பித்து வெளியிட்ட அடங்கன்முறை தேவாரப்பதிகப்பிரதி ஒன்று வேண்டும். பிரதி வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: இ. சங்கர், 430, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (54434)

## கண் தான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 31

கண்தான தினத்தை முன்னிட்டு இன்று யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியில் கண்தானம் பற்றிய கருத்தரங்கு நடைபெறும். (இ-8)

---

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 31 — 12 — 1960



விண்ணில்: 20 — 03 — 1988

## திருமதி உமாபதி தவம்

திதி: 31 - 03 - 98

திருமணம் ஆகி இருமாதம் ஆகையில்
இல்லறத்தேனை இனிக்கச் சுவைக்கையில்
காலக்கயன் கண்படலாச்சே
முன்னைத்தவத்தால் பெற்ற தவப்பொருள்
பின்னைத்துயரில் மூழ்கடித்ததுவே.
பத்தாண்டு சென்றாலும் உனது பால்முகம்
எம் மனதில் பசுமையாய் உறைந்திருக்கிறது.

உமாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அம்மா, அண்ணா,
அண்ணி, மருமகன்.

மகேஸ் வாசா,
நாவற்குழி, கைதடி. (54410)

---

## நீங்காத நினைவில் ஓராண்டு

மலர்வு: 26 — 07 — 1936



உதிர்வு: 11 — 04 — 1997

## திருமதி செல்வம் கணபதிப்பிள்ளை

திதி: 31— 03— 1998

எங்கள் திருவிளச்காய், அன்பொழி வீசி, பாசமாய், நேசமாய், பண்பாய் எமைவாழ வைத்து, தாமும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த வாழ்வு, இடையில் ஏற்பட்ட உங்கள் எதிர்பாராத இழப்பு எம்மால் என்றும் மறக்கமுடியாதவை.


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

K. S. கணபதிப்பிள்ளை (கணவன்)
மகள், மருமகன், பேரன்,
உறவினர்.

''செல்வபதி''
கைதடிகிழக்கு,
கைதடி. (54396)

---

# திருமணப் பொன்விழா





## திரு. திருமதி கந்தவனம் பாக்கியம்

31 - 03 - 1998 அன்று தங்களின் திருமணப் பொன்விழாவைக் கொண்டாடும் ஏழாலை - புனித இசிதோர் ஆலய பங்கைச் சேர்ந்த

**திரு. திருமதி கந்தவனம் பாக்கியம்** தம்பதிகளுக்காக

**04 - 04 - 1998** சனிக்கிழமை காலை 7-30 மணிக்கு புனித இசிதோர் ஆலயத்தில் நடைபெறும் நன்றித் திருப்பலிப் பூசையில் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

ஜோன் - பத்மா
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஏழாலை தெற்கு, ஏழாலை. (54384)

---

உ

கரவெட்டி
யார்க்கரு வரசித்தி விநாயகர்

## வருடாந்த மஹோற்சவம்

01-04-98

கொடியேற்றம் நண்பகல் 12.00 மணி
தேர்த்திருவிழா 09-04-98 காலை 10 மணி
தீர்த்தத்திருவிழா 10-04-98 நண்பகல் 12 மணி

மஹோற்சவகுரு
சிவப்பிரம்மஸ்ரீ - ராம் - கெங்காதரக்குருக்கள்
சாரதாபீடம்
ஷெ தேவஸ்தானகுரு

(54430) ஆலய அறங்காவலர் சபை.

---

உ

சங்கரத்தை

## பத்திரகாளி அம்பாள் ஆலயம்

## மஹோற்சவவிஞ்ஞாபனம்

கொடி ஏற்றம் : **01 - 04 - 98** புதன்கிழமை
முற்பகல் 11 - 00 மணி
சப்பறம்: : **09 - 04 - 98** வியாழக்கிழமை
தேர் ; **10 - 04 - 98** வெள்ளிக்கிழமை
தீர்த்தம்: : **11 - 04 - 98** சனிக்கிழமை
காலை உற்சவம் : 9-00 — 1-00 மணி வரை
மாலை ,, ,, : பிற்பகல் 3-00 — 6.00 மணி வரை
மகோற்சவ குரு:-

சு. சுந்தரராசாக்குருக்கள்
(வழக்கம் பறை அம்பாள் ஆலயம்)

(54428) - ஆலய பரிபாலகர்

---

உ

தென் துன்னையம்பதி

## ஸ்ரீ கௌரி அம்பிகா சமேத பூதேஸ்வரர்

(சிவன் தேவஸ்தானம்)

பஞ்சகுண்ட பக்ஷ ஜீர்னோத்தாரண
அஷ்டபந்தன

## மஹாகும்பாபிஷேகம்

**(01 - 04 - 1998)**

முகூர்த்த நேரம் 6-03 முதல் 7-35 வரை

பிரதிஷ்டாகுரு:
சிவப்பிரம்மஸ்ரீ ராம். கெங்காதரக்குருக்கள்
(சாரதா பீடம் வடமராட்சி ஒன்றிய செயலாளர்)
தேவஸ்தான குரு:
யோ. நாகராச சர்மா
(வடமராட்சி ஒன்றிய பொருளாளர்)
அனைவரும் வருக

ஆலய திருப்பணிசபை
(54429) தலைவர் திரு. சதானந்தன்

---

## வாழ்த்துகின்றோம்

29-04-98 ஞாயிறு

இணுவில் கவிமாமணி மா.த.ந. பிரம்மஸ்ரீ
வீரமணி ஐயா அவர்களுக்கு

நடைபெற்ற பாராட்டு விழாவில் தொடர்ந்தும் அவரது கவிப்பாக்கள் இந்த நாட்டிற்கு வரவேண்டும் என்று கூறி வாழ்த்துகிறோம்.

பல்லாண்டு வாழ்க, வளர்க கவி

சிவப்பிரம்மஸ்ரீ — ராம்.
கெங்காதரக் குருக்கள்
(54431) சாரதாபீடம்.

---

## மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**விசுவலிங்கம் செல்வரத்தினம்**

அராலி வண்ணப்புரம் ஸ்ரீ விசாலாட்சி
அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர்
பரிபாலனசபை

எமது சபைத் தலைவர் அராலி மத்தியைச் சேர்ந்த
**உயர்திரு. விசுவலிங்கம் செல்வரத்தினம்**
அவர்கள் நீதி அமைச்சினால்
அகில இலங்கை சமாதான நீதிவானாக
நியமனம் பெற்று **16 - 03 - 98** அன்று
மல்லாகம் மாவட்ட நீதிபதி
உயர்திரு. மு. திருநாவுக்கரசு

முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இவரை நாம் மனமார வாழ்த்தி அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து நீதித் துறையில் நல்ல சேவை செய்ய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை அங்கத்தவர்

[54408]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## செல்வா நினைவு

ஈழத் தமிழர்களின் தானைத் தலைவன் தந்தை செல்வநாயகத்தின் நூற்றாண்டு நிறைவு தினம் இன்றாகும். தமிழர்கள் உரிமை உள்ள மக்களாக வாழ்வதற்கு, அவர்களுக்கெனத் தன்னாட்சி அரசு நிறுவப்பட வேண்டும் என்பதே அவரது தாரக மந்திரமாக இருந்தது.

ஈழத்தமிழர்களின் இறைமையும், ஆட்சி உரிமையும் மீள்விக்கப்பட வேண்டும் என்பது அவரது அரசியல் சித்தாந்தமாக அமைந்தது. அதற்காக அவர் பல தியாகங்களைச் செய்ததோடு, கஷ்டங்களையும் அனுபவித்தார்.

கூட்டாட்சி அரசு முறையின் கீழ் தமிழர்களுக்கென தன்னாட்சி அரசு ஒன்றை நிறுவி சிங்கள மக்களுடன் இணைந்து வாழ முயல்வது: அதற்கு அவர்கள் இணங்காவிடில் தமிழர்கள் பிரிந்து வந்து தமது தாயகத்தில் சுதந்திர தமிழீழம் ஒன்றை அமைப்பது. இதுவே அவரது தீர்க்க தரிசனம் மிக்க நோக்காக இருந்தது.

அந்த நோக்கத்தை அடைவதற்காக அவர் அயராது உழைத்தார். சிங்களத் தலைவர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்து உரிமைகளைப் பெறமுயற்சித்தார். ஆனால் அவை செயலுருவம் கொடுக்கப்படாமலே கிழித்து எறியப்பட்டன.

அந்த அனுபவங்களின் விளைவாக, தமிழர்கள் சுதந்திரமும் கௌரவமும் உள்ள பிரஜைகளாக வாழ வேண்டுமானால், சுதந்திரத் தமிழரசு நிறுவ வேண்டும் என்ற மாற்றமில்லாத தீர்க்கமான முடிவுக்கு வந்தார்.

அந்த முடிவே 1976 ஆம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானமாகியது. தந்தையின் அந்த முடிவு ஈழத்தமிழர்களின் (1977 பொதுத்தேர்தலில்) அரசியல் ஆணையுமாகியது.

தமிழர்களின் சுதந்திர உணர்வை மழுங்கடிப்பதற்காக இராணுவ அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்கள். அதன் உச்சக் கட்டமே இன்றைய போர் நிலைமை. இந்தப் போரின் விளைவுகள் மட்டுமன்றி அரசின் ஏனைய சிவில் நடவடிக்கைகளும் கூடத் தமிழர்கள் மனிதர்கள் அல்லர் பிராணிகள் என்ற கணிப்புடனேயே நடந்தேறுகின்றன.

இத்தனை கொடுமைளுக்கும் மத்தியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு முயற்சி என்ற குரல் மெல்லென எழுந்தது; இப்போது பண்பலை மெலிந்து தேய்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

இன்றைய நிலையில், தமிழ்த் தலைவர்கள் எனத் தலைப்பாகை கட்டி நிற்பவர்கள் தந்தையின் — தமிழ் மக்களின் — நோக்கத்தை மறந்து நடக்கக் கூடாது. தங்களுக்குள்ள தனிப்பட்ட இலாபங்களை முன்னிறுத்தி தமிழ் மக்களின் உரிமைகளைப் பேரம் பேச முற்படக் கூடாது. ஒரே அணியில் ஒரே குரலில் தமிழர் அரசைவலியுறுத்த வேண்டும். தமிழ் மக்களின் இன்றைய விருப்பம் இதுவே என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும். அதுவே அவர்கள் தந்தைக்குச் செய்யும் பெரும் அஞ்சலியாக அமையும்.

# கூட்டாட்சி அரசமைப்பில் தமிழர் தன்னாட்சி;

# அதற்கு இணங்காவிடில் சுதந்திரத் தமிழரசு

தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களின் நூற்றாண்டு இன்று (31. 03. 1998 இல்) நிறைவு பெறுகிறது.

தந்தை செல்வா, தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்து, அரை நூற்றாண்டு நிறைகிறது.

தந்தை செல்வா கால்நூற்றாண்டு காலம் தமிழ்பேசும் மக்களின் விடிவுக்குத்தன்னை முழுமையாக ஓயாது தலைசாயாது அர்ப்பணித்து உழைத்தார்.

தந்தை செல்வா இம் மண்ணை விட்டுப்பிரிந்து இரு தசாப்தங்களாகிவிட்ட பொழுதிலும் தமிழ்பேசும் மக்களின் இதயங்களில், நாடி நரம்புகளில் இன்றும் உயிர் ஓட்டமுள்ள சக்தியாக, விடுதலை உணர்வுகளைச் சுதந்

## தந்தை செல்வா விட்டுச் சென்ற மாற்றமில்லா அரசியல் தத்துவம்

திரத் தீயை மூட்டி நிற்கிறார்.

தந்தை செல்வா மெலிந்த உருவமாகத் தெரிந்தாலும், கொண்ட கொள்கையில், இலட்சியத்தில் பற்றுறுதி கொண்ட எஃகு எனத்திகழ்ந்தார்.

தந்தை செல்வாவின் வார்த்தைகள் மென்மையாக இருந்தன. ஆனால் சத்தியம் நிறைந்த கருத்துக்கள் பொதிந்தவையாயிருந்தன; வைரமணிகளாய் துலங்கின.

தந்தை செல்வா தன் சொந்த வாழ்விலும், சட்டத் தொழிலிலும், அரசியல் பொது வாழ்விலும் நேர்மை, கண்ணியம், கடமை, கட்டுப்பாடு கடைப்பிடித்து ஓர் உன்னதமிக்க உதாரண மனிதனாக வாழ்ந்து காட்டினார்.

தந்தை செல்வா இலங்கையில் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை அரசு கொண்டுவந்த இந்திய–பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தினால் பத்து இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள், மலையகத் தமிழ்மக்கள் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து நின்றார். போராட்டத்தைத் தொடங்கினார்.

''இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப் படுகின்றது. நாளை மொழிப் பிரச்சினை வரும்பொழுது இலங்கைத்தமிழ்மக்களுக்கும் இதே கதிநேரிடும். எனவே இப்பொழுதே நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இவ்வநீதியை எதிர்க்கவேண்டும்'' என்று இலங்கை நாடாளுமன்றத்தில் முழக்கமிட்டார்; எதிர்த்து வாக்களித்தார். [நாடாளுமன்ற நடவடிக்கை ஏடு(ஹன்சாட்) 10. 12. 1948]

தந்தை செல்வா. 1956 ஆனி 5 ஆம் நாள் ''இலங்கையின் ஆட்சி, நிர்வாக மொழி 'தனிச் சிங்களம் மட்டுமே' என்ற சட்டம் வந்தபொழுது அதனை எதிர்த்து கொழும்பு காலிமுக மைதானத்தில், நாடாளுமன்றத்திற்குஎதிரே 200– க்குமதிகமான வடக்கு–கிழக்கிலிருந்து வந்த தொண்டர்களுடன் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கினார்.

அரசின் தூண்டுதலோடு சிங்களக் காடையர்கள் மூங்கில் தடிகளால், கற்களால், செருப்புக்களால் சத்தியாக்கிரகிகளைத் தாக்கினர். தந்தைசெல்வாவின்இருபுதல்வர்கள் தாக்கப்பட்டனர்.



### தந்தை செல்வா நூற்றாண்டு நினைவுக் கட்டுரை

தந்தையின் தளபதிஎன வர்ணிக்கப்பட்ட அமிர்தலிங்கம் அவர்களின் தலை பிளந்தது. தலைவர்கள் வன்னியசிங்கம், நாகநாதன், வ. ந. நவரத்தினம்தொண்டர்செல்லையா ஆகியோர்பலத்தகாயங்களுக்குள்ளாகினர். தமிழ்மொழிப் போரில் முதல்முறை சத்தியாக்கிரகிகளுக்கு எதிராக வன்முறை ஏவப்பட்டது. இரத்தம் சிந்திய வரலாறு தொடங்கியது.

### ஆத்மார்த்தத் தலைவர்

தந்தை செல்வா இலங்கை அரசியலில் தீர்க்கதரிசியாகத் திகழ்ந்தார். அவர் அரசியல் தீர்க்கதரிசனமும், வாய்மையும், நேர்மையும், அர்ப்பணிப்பும், மக்கள் போராட்டங்களும் தமிழ் மக்களிடம் மட்டுமல்ல முஸ்லிம், சிங்கள மக்களிடமும் அரசியல் தாக்கத்தையும், செல்வாக்கையும் செலுத்தி நிற்கின்றார்.

தமிழ்பேசும் மக்களின் தலைவன், தேசத்தின் வழிகாட்டி என இலங்கையிலும், வெளிநாடுகளிலும் ஆளுமை கொண்டிருந்தார். தமிழ் பேசும் மக்களின் ஆத்மார்த்த தலைவராக விளங்கியவர் தந்தை செல்வா.

1949 இல் தமிழரசுக் கட்சியைத் தொடக்கியதிலிருந்து அக் கட்சியின் தலைமைப் பொறுப்பு மூன்று முறை தமிழரசுக்கட்சி மாநாடுகளில் தந்தை செல்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது. தலைமைத்துவத்தை நிரூபித்துச் செயலாற்றினார். தலைமைப் பண்புகள் மிளிர்ந்தன.

தந்தை செல்வா தமிழ் பேசும் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட ஈடுஇணையற்ற தேசியத் தலைவராகவிளங்கினார். தமிழினம் இலங்கையின்தேசியஇனம். அவர்களுக்கென்று இலங்கையின் வடக்கு–கிழக்கு மாநிலம் எனும் ஒரு பாரம்பரியத் தாயகம் உண்டு; தனியான தமிழின அடையாளம், பாரம்பரியமிக்க தமிழ் மொழி, தனியான பண்பாடுகள் கொண்டது தமிழினம்; அவர்களுக்குத் தங்கள் 'அரசியல் எதிர்காலத்தை தங்களின் ஆளும் உரிமையை நிர்ணயிக்கும் ''சுயநிர்ணய உரிமை', உண்டு' என நிலை நாட்டியவர் தந்தை செல்வா.

இதே போன்று தமிழ் மொழிபேசும் முஸ்லிம் மக்களின் ஜனநாயக, அரசியல், சமூக உரிமைகளையும் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து அரசியல் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

தமிழ் மக்களிடத்திலே பிரதேச வாதங்களையும், சாதி, சமய வேறுபாடுகளையும் நீக்கி ஒரு தலைமையின் கீழ், ஒரு கொடியின் கீழ் ஒன்றுபட்ட தமிழ்ச்சமுதாயத்தை உருவாக்கிட அயராது தன்னை அர்ப்பணித்து உழைத்தார். பெருமளவில் வெற்றியும் கண்டார்.

தமிழ்த் தேசிய இனத்திலும் முஸ்லிம் தேசிய சமூகத்தினதும் அரசியல் உரிமைகளுக்காக அறவழியில் மக்கள் போராட்டங்களை நடத்தினார் தந்தைசெல்வா

''தனிச் சிங்கள ஆட்சி மொழிச் சட்டத்தின் சின்னமாக வாகனங்களில் பொறிக்கப்பட்ட சிங்கள 'ஸ்ரீ' யை அழித்து, தமிழ் 'ஸ்ரீ' யைப் பொறித்தார் என்று மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டார். சிறையிலடைக் கப்பட்டார். சிறைக்கைதிகளின் உடையில் சிறையிருந்தார். பல தடவைகள் தடுப்புக் காவலிலும் வீட்டுக்காவலிலும் வைக்கப்பட்டார்.

தந்தை செல்வா அவர்களை ''ஈழத்துக் காந்தி'', ''பெரியவர்'', ''தந்தை'', ''மூதறிஞர்'' என்றெல்லாம் தமிழ் பேசும் மக்கள் அன்புடன் அழைத்தனர். அவ்வாறே ஏனைய அரசியல் தலைவர்களும், சமூகத்தவர்களும் அந்த வரலாற்று நாயகனை அழைத்து மதித்தனர்.

மாவை சேனாதிராசா

### ஒப்பந்தங்கள்

தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் பொருட்டு 1957 இல் பிரதமர் பண்டார நாயக்க—செல்வ நாயகம் உடன்படிக்கை, 1965இல் பிரதமர் டட்லி சேனநாயக்க — செல்வநாயகம் உடன்படிக்கை என ஏற்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் ஒப்பந்தங்கள் இன்றும் அரசியல் தீர்வுகளுக்கு அடிப்படைகளாக அமைந்திருக்கின்றன.

தந்தை செல்வா அரசியலில் ''நம்ப நட நம்பி நடவாதே'' எனும் உத்தியைக் கையாண்டவர்.

'இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பே தமிழினத்தின் முதல் எதிரி' எனும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அரசியலமைப்பும், தேசிய இனங்களின் தன்னாட்சி உரிமை அங்கீகரிக்கப்படுவதுமே தீர்வாகும் என நம்பினார்.

''சர்வதேச மாநாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசிய இனம் தன்னைத் தானே ஆளும் தன்னாட்சி உரிமையை சிங்களத் தேசிய இனம் அங்கீகரிப்பதன் மூலம் ஒரு கூட்டாட்சி(சமஷ்டி)யில் தமிழர்களும் சிங்களவர்களும் தம்மைத் தாமே ஆட்சி

(9 ஆம் பக்கம் பார்க்க)

### தவக்கால சிந்தனை

(35 ஆம் நாள்)

சுமைகள் அழுத்தும்; சோதனைகள் வாட்டும்; உறவுகள் பிரியும். அவ்வேளை உன்மன வேதனையில் ''ஏன் இறைவா இந்த சிலுவைப் பாரங்களை என் மீது சுமத்துகின்றாய்'' என்பாய். முணுமுணுப்புக்கள் மட்டும் உன் வாழ்வை மாற்றி விடுமா?

முதல் முறை அல்ல மூன்று முறையும் விழுந்து துவண்டாரே இறைமகன் இயேசு தன் பயணத்தை தவிர்த்தாரா? தொடர்ந்தாரல்லவா? இதே போல பலர் சுமைகளைக் கண்டும் காணாதவராக, ஆறுதல் கூறவோ ஆதரவு தரவோ குரல் கொடுக்க நல்ல மனங்கள் இல்லையா என்று பல குரல்கள் ஒலிக்கின்றன. அன்று இயேசுவிற்கு ஒரு சீமோன் உதவ முன் வந்தான். அதே சீமோனைத் தேடும் இதயங்கள் எம் எதிரிலும் உள்ளனவே. நீ ஒரு சீமோனாக மற்றவர் சுமை தீர சிலுவைப்பாரத்தை சிறிது தூரம் தூக்க விழுந்தவர் எழுந்து நடக்க உதவுவாயா? பாவச் சுமை களைந்து மற்றவர் துயரிலும் நீ ஒரு சீமோனாக இத் தவக்காலத்தில் இணைவாயா?

- யோசப் பாலா

### உதயவாக்கு

உலகத்தின் சோதனைக்கு உட்படாமலும், அதனிடம் பாடம் படிக்காமலும் ஒருவன் நிறைவுள்ள மனிதனாக விளங்க முடியாது. அனுபவம் ஊக்கமாக உழைப்பதிலிருந்து கிடைக்கிறது. காலத்தின் வேகம் அதைச் செம்மைப்படுத்துகிறது.

- ஷேக்ஸ்பியர்

### தந்தையின் நூற்றாண்டில் உறுதி

தந்தைக்கு வயது நூறு இன்று
தந்தையின் இலக்குக்கு வயது எத்தனை இன்று
தந்தையின் தீர்க்கதரிசனம் அதுவே அன்று
தந்தையின் நூற்றாண்டில் கொள்வோம் உறுதி.

தமிழர்க்கு வந்ததே சோதனை என்று
தந்தை முன்வைத்த கோரிக்கை ஒன்று
தமிழர் அதற்கிட்டனர் ஆணை அன்று
தந்திடுமே நூற்றாண்டு தமிழர்க்கு உறுதி.

தந்தைக்கு நூற்றாண்டு கொண்டாடும் இன்று
தன்மானம் காக்க வழியொன்று கண்டு
தமிழினம் ஒரு கொடியில் ஒற்றுமையானால்
தமிழர்க்கு விடிவு நூற்றாண்டில் உறுதி.

தந்தையின் கொள்கையில் தமிழர்கள் அனைவரும்
தவறாது நேர்மை வழிமீது சென்றால்
தந்தையின் இலட்சியம் ஈடேறும் என்றும்
தந்தையின் நூற்றாண்டில் நிறைவேறும் உறுதி.

- காரைநகர் ஆறுமுகம் தங்கரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதி கிடைக்காத நிலையில் மீளக் குடியேறத் துடிக்கும் மக்கள்

வலி—வடக்கு, மார்ச் 31

வலி— வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நீண்ட காலமாக துன்பங்களை சுமந்து கொண்டிருக்கும் மக்கள் தமது இருப்பிடங்களில் மீளக் குடியமர வேண்டும் என்று துடிக்கிறார்கள். அனுமதிக்கப்படாத பட்சத்தில் அத்துமீறி தமது இடங்களில் குடியேற வேண்டும் என நினைக்கிறார்கள்.

வலி—வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத்தலைவர் என். ஏ. ஒபடேயிடம் வலி—வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒபகேயிடம் மகஜர் ஒன்றையும் அவர் கையளித்தார்.

அந்த மகஜரில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

வலி—வடக்குக்கு தத்தம் இருப்பிடங்களுக்கு மக்கள் திரும்பும் வரை அவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்; அவர்களுக்கு மீள் குடியமர்வு நிவாரணமாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதுடன், அவர்கள் தற்சமயம் தங்கியுள்ள இருப்பிடங்களைத் திருத்த 15 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட வேண்டும்.

தனியார் வீடுகள், கடைகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளது. இதனால் பொதுமக்கள் அங்கு செல்ல முடியாதுள்ளது.

சுற்றிவளைப்பு, தேடுதல் என்று படையினர் கொதிக்கும் வெயிலில் மக்களை அலைக்கழிக்கிறார்கள். இராணுவ ஆட்சியில் அனுபவிக்கும் துன்பங்கள் போன்ற நிலை இங்கு காணப்படுகிறது. இத்தகைய நிலையில் இருந்து மக்கள் விடுபட உதவ வேண்டும். இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-86-3)

## சீமெந்து விநியோகம்

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் வன்செயலால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைப்பதற்கு இலவசமாக சீமெந்து வழங்கும் நடவடிக்கைஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவு என்ற அடிப்படையில் பிரதேச செயலகத்தில் வைத்து சீமெந்து விநியோகம் செய்யப்படும்.

கிராம உத்தியோகத்தர்களால் இனம் காணப்பட்ட- மாதாந்தம் 1, 500 ரூபாவுக்கு குறைவான வருமானம் பெறும் – குடும்பங்களின் வீடுகளின் பாதிப்புகளை செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மதிப்பீடு செய்து அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபடி சீமெந்து விநியோகிக்கப்படும்

(இ–12)

## சேதமடைந்த 3 ஆலயங்களுக்கு தலா 40 லட்சம் ரூபா ஒதுக்கீடு

''வடக்கில் சேதமடைந்த மூன்று ஆலயங்களை புனரமைக்க ஆரம்பக் கட்டமாக ஒவ்வொரு ஆலயத்துக்கும் 40 லட்சம் ரூபா என்ற வீதத்தில் நிதி வழங்கப்பட்டுள்ளது''.

மேற்கண்டவாறு வட மாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் என். ஏ. ஒபடகே தெரிவித்தார்.

கடந்தகால நடவடிக்கைகளால் சேதமடைந்த இந்து முஸ்லிம் ஆலயங்களின் புனரமைப்புக்கு உதவுமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர்.

இதன்படி முதல்க்கட்டமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில், மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயம் ஆகியவற்றுக்கு தலா 40 லட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆலயங்களின் ஆரம்ப பணிகளுக்கே அவை பயன்படுத்தப்படும்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது மாவிட்டபுரம், கீரிமலை ஆலயத்துக்குச் சென்றேன். அந்த ஆலயங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்க்கும் போது இந்த நிதி உதவி போதாது என்பதை உணர்ந்தேன்.

மேலும் கூடுதல் நிதிவழங்க ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறுவேன் — என்றார்.

(இ-9-3)

## வீதி சேதம்

நெல்லியடி, மார்ச் 31

மாலுசந்தியிலிருந்து வியாபாரிமூலைச் சந்தி வரையிலான வீதி பல வருட காலமாக சேதமடைந்திருக்கின்றது.

இவ்வீதியைத் திருத்துவதற்கு வீதி ஓரத்தில் பறிக்கப்பட்ட தார் பரல்களுடன் கற்களும், மாயமாக மறைந்துள்ள அதேவேளை, இப்பகுதியால் செல்வோர் பெரும் ஆபத்துக்களை எதிர் நோக்குகின்றார்கள்.

(இ-109)

## புதிய பங்கீட்டு அட்டை

வட்டுக்கோட்டை, மார்ச் 31

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகப் பகுதியில்வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் புதிய பங்கீட்டு அட்டை வழங்கும் நடவடிக்கை கிராம உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே சகல குடும்பத்தவர்களும் தத்தமது பிரிவு கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கோண்டு பாவனையிலுள்ள பங்கீட்டு அட்டையை ஒப்படைத்து புதியபங்கீட்டு அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்றது.

[இ–12]

## ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

பிரசித்தி பெற்ற சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து கோயிலின் உட்புற வெளிப்புற திருத்த வேலைப்பாடுகள் நடைபெறுகின்றன.

கோயிலின் கோபுரம், தேர்முட்டி, சிற்பவேலைகள் ஆகியவற்றில் வர்ணம் தீட்டப்படவுள்ளது.

தற்போது தேர் முட்டி மண்டபம் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது.

(இ–139)

## விவேகானந்தன் மலர் பிரதி கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டுச் சிறப்பு மலரான ''விவேகானந்தன்'' மலரின் ஒரு பிரதியை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் கல்லூரி உப அதிபர் எஸ். ஸ்ரீ ராமச்சந்திரனிடம் கையளித்தார்.

இந்தச் சிறப்பு மலர் கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கிளையின் உபதலைவர் தவத்திருசுவாமி ஆத்மகணானந்தர் மகராஜியின் ஆசிரியருடனும், கொழும்பு விவேகானந்த சபை, அகிலஇலங்கை இந்து மாமன்றம் ஆகியனவற்றின் ஆதரவுடனும்ஒன்றறைஇலட்சம் ரூபா செலவில் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகும்.

(இ–8)

### ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில்

## ஜனாதிபதி அலுவலகம், மாளிகை அமைக்கும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை, இரு காவல் நிலையங்கள் ஆகியவற்றை ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் அமைக்க ஆரம்பப் பணிகள் நடைபெறுவதாக நகர அபிவிருத்திச்சபை உப-தலைவர் டபிள்யூ. டிக்சன் தெரிவித்தார்.

இந்தக் கட்டடத் தொகுதியை பத்தரமுல்லையில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டபோது, அந்தப் பகுதியில் இருந்து 700 குடும்பங்கள் இடம்பெயர வேண்டியிருந்தது. அத்துடன் பெருந்தொகையான நிதியில் அங்கு அமைப்பது சாத்தியப்படாததால் ஜெயவர்த்தனபுரவில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஜெயவர்த்தனபுரவில் தெரிவு செய்யப்பட்டுள்ள 100 ஏக்கர் நிலத்தில் நில அளவைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணியில் 14 ஏக்கர் மட்டுமே அரச காணியாகும். எஞ்சியவை தனியாருக்குச் சொந்தமானவை. அவர்களுடன் தொடர்பு கொண்டு காணி பெறப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(இ–10-3)

## சிறுவரின் பிறப்புக்களை பதிவு செய்ய நடவடிக்கை

வட்டுக்கோட்டை, மார்ச் 31

பதிவு செய்து கொள்ளப்படாத சிறுவர்களின் பிறப்புகளை பதிவு செய்வதற்கு சிறுவருக்கான அபிவிருத்தி நிறுவனம் என்னும் தொண்டர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் மேற்படி நிறுவனம் மேற்கொண்ட கணிப்பின்படி 600-க்கும் மேற்பட்ட சிறுவர்களின் பிறப்புகள் பதிவு செய்யப்படவில்லை.

அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஊரத்திக் கிராமத்தில் மட்டும் அறுபதுக்கு மேற்பட்ட சிறுவர்களின் பிறப்பு பதிவு செய்யப்படாதது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத சிறுவர்களின் பதிவுகளை மேற்கொள்ள தேவையான விண்ணப்பப் படிவங்களை கிராம உத்தியோகத்தர்களுக்கு மேற்படி நிறுவனம் வழங்கி உள்ளது.

(இ–12)

# வவுனியா 'பாஸ்' கெடுபிடிகளால் தமிழர்வெளியேசெல்லமுடியாத நிலை

## செஞ்சிலுவை வவுனியா கிளைத்தலைவர் தகவல்

வவுனியா, மார்ச் 31

வவுனியாவில் வழங்கப்படும் பாஸ் நடைமுறையினால் தமிழ் மக்கள் வெளியே எங்கேயும் செல்ல முடியாதுள்ளது. இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதியிலிருந்து வருபவர்கள் பாதுகாப்பு அமைச்சின் பணிப்பின் பேரில் முகாம்களிலேயே இருக்க வேண்டும். வெளியே இருக்கும் பெற்றோர் தமது பிள்ளைகளையும் பிள்ளைகள் தமது பெற்றோரையும் தம்முடன் அழைத்துச்செல்லலாம். ஆனால் அதற்கும் நிரந்தர பாஸ் வேண்டுமென்று ஓர் இடைச் செருகல்.

நேற்று முன்தினம் வவுனியா மகாவித்தியாலயத்தில் வடக்கு – கிழக்கு ஆளுநர் காமினி பொன்சேகா நடத்திய மாநாட்டில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வவுனியாக்கிளைத் தலைவர் கிஷோர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோர் வெவ்வேறு முகாம்களில் இருக்கிறர்கள். பணம் கொடுத்துத்தான் முகாமிலிருந்து அவர்கள் வெளியே வருகிறார்கள். பணமில்லாதவர்களின் நிலை என்ன?

தற்போது முகாம்களில் இருப்பவர்களை விடுவிப்பது, பாஸ் புதுப்பித்துக் கொடுப்பது, கொழும்புக்குச் செல்வோருக்கு பாஸ் வழங்குவது எல்லாவற்றையும் பொலீஸ் அத்தியட்சகர் தான் கவனிக்கிறார். ஒருவர் இந்த வேலைகளை கவனிப்பதிலும் பார்க்க ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அதிகாரி தரத்திலான பொலீஸாரை நியமித்து இந்த நடைமுறைகளைத் துரிதப்படுத்தலாம்.

### ஆஸ்பத்திரி நிலை

நான்கு மாவட்டங்களுக்கு பொதுவாக இருக்கும் வவுனியா வைத்தியசாலையில் கட்டில்வசதிகளோநோயாளிகளைப் பார்க்கக்கூடிய வைத்திய நிபுணர்களோ இல்லை.

இதனால் இங்கிருந்து அவசர நோயாளர்கள் அனுராதபுர வைத்தியசாலைக்கு மாற்றப்படுகிறார்கள்.

பாதுகாப்பு காரணமாக நோயாளியுடன் உதவியாளர் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. பின்பு வீடியோ எடுத்து,பாஸ் எடுத்தே அவர்கள் அனுராதபுரம் செல்ல வேண்டும்.

இப்படி செல்லும் போது சில வேளைகளில் நோயாளி இறந்தும் விடுகிறார்.

அனுராதபுரத்தில் வைத்தியசாலை இவ்வளவு வசதிகளுடன் இருக்க முடிகிறது என்றால் ஏன் வவுனியாவில் அவ்வாறு வசதிகளுடன் நோயாளிகளை பராமரிக்க முடியது?

வவுனியா வைத்தியசாலை மகப்பேற்றுப் பிரிவில் பிரசவித்த குழந்தைகளுடன் தாய்மார்கள் நிலத்திலேயே படுத்திருக்கிறார்கள்.

அங்கு ஊழியர் பற்றாக்குறை நிலவுகிறது.

மற்றும் நாடாளுமன்ற பிரதி நிதிகளின் ஆதரவில் கட்டி முடிக்கப்பட்டுவிட்ட போதிலும் முழுமையாக பணம் வழங்காததால் ஒப்பந்தகாரர்கள் அதனைக் கையளிக்க வில்லை.

அடுத்து வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து அரசாங்கம் காப்பாற்றும் என்று வந்திருப்பவர்களை குண்டு வைக்கிறார்கள் என்று சொல்லி கொழும்பு செல்ல அனுமதிக்கிறார்கள் இல்லை.

ஆனால் இவர்களை வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழ் பிரதேசங்களில் வாழ அனுமதிக்கலாம் தானே.

மூன்று நாள்களுக்கு ஒரு முறை பொலீஸ் அத்தியட்சகரின் கையெழுத்து வாங்கி பாஸ் புதுப்பிப்பதற்காக மக்கள் வெய்யிலில் வாட வேண்டியுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

வன்னிமாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன் உரையாற்றும் போது.

வட பகுதியிலுள்ள பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்பாக வடக்கு- கிழக்குக்குப் பொறுப்பான பாதுகாப்பு அதிகாரிகள் வடக்கு-கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர்கள் மாகாண சபை உயர் அதிகாரிகள் ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து பேச்சு நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்றார்.

நேற்று முன்தினம் ஆளுநருடன் நடைபெற்றகலந்துரையாடலில் ஆளுநர் காமினி பொன்சேகா, மாகாணசபைச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(இ–164-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டாட்சி அரசமைப்பில்...

(ஏழாம் பக்கத் தொடர்)

செய்து கொண்டு ஒற்றுமையுடன் வாழலாம்'' எனும் அரசியல் தீர்வுத் திட்டத்தை தந்தை செல்வா முன்வைத்துத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து, 1949 முதல் அரசியல் இயக்கத்தை நடத்தி வந்தார்.

சிங்களத் தலைவர்கள் சமஷ்டி அமைப்பை ஏற்காததனால், 1972 இல் புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டபொழுது தமிழ் பேசும் மக்களின் அரசியல் அடிப்படை உரிமைகள் ஏற்கப்படாத நிலையில், சிங்கள அரசுகள் மீது ஏமாற்றமடைந்த தந்தை செல்வா, 1975 ஆம் ஆண்டில் காங்கேசன்துறைத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலின் போது, ''சுதந்திரத் தமிழீழம்'' தான் தமிழினப் பிரச்சினைக்குத் தீர்வாகும் என அறிவித்தார். இக்கருத்தை நாடாளுமன்றத்திலும் தெரிவித்தார்.

*சுதந்திரத் தமிழீழ அரசு*

1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில், மக்களிடமே இறைமையுண்டு; தமிழ்த் தேசிய இனம் ஐரோப்பியரிடம் இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற வேண்டும்; சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இலங்கையில் சுதந்திரத் தமிழீழ அரசை நிறுவ வேண்டும் எனும் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

அந்த மாநாட்டிலே தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம், சௌ. தொண்டமான் ஆகியோர் கூட்டுத் தலைமையேற்றனர்.

தமிழினம் விடுதலை பெறுவதற்கு இந்தியாவின் ஆதரவு வேண்டுமென்று திடமாக நம்பினார். 1972 லேயே திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன இந்தியா சென்று இந்தியத் தலைவர்களிடம் ஆதரவு கோரினார். ''சுதந்திரம் பெறுவதற்கு காந்திய வழியில் அஹிம்சைப் போராட்டம் நடத்துவோம்'' என்றார்.

''அடிமைத் தனத்திலிருக்கும் மக்கள் சுதந்திரத்தை அடைவதற்கு இரு அம்சங்கள் ஒன்றாக அமைய வேண்டும். ஒன்று, அம்மக்களின் சுயாதீன வேட்கைப் பெருக்கமும் அதற்காகச் செய்யும் முயற்சியும்; மற்றது உலக நடவடிக்கைகளால் வந்தேற்படும் சந்தர்ப்பம்'' என 1954இல் திருமலையில் நடைபெற்ற முதலாவது தமிழரசு மாநாட்டில் தந்தைசெல்வா குறிப்பிட்டார்.

''தமிழ்த் தேசிய இனம் சுயநிர்ணயஉரிமையின்அடிப்படையில்,'' கூட்டாட்சி அரசமைப்பில் சிங்கள மக்கள் தன்னாட்சி அரசும், தமிழ்ப்பேசும் மக்கள் தன்னாட்சி அரசும் எனக் கூடி வாழலாம் அல்லது தமிழ்த் தேசிய இனம் பிரிந்துசென்று சுதந்திரத் தமிழரசை நிறுவி வாழலாம்'' எனும் தத்துவத்தை நிலை நாட்டினார் தந்தை செல்வா.

தந்தை செல்வா தமிழ்ப் பேசும் மக்களுக்கு விட்டுச் சென்ற அரசியல் தத்துவம் இது தான்.

★

# செயலாளர் யாழ். நகரில்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வடக்கு, கிழக்கு மாகாண கல்வி, பண்பாடு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா பத்து நாள் விஜயமாக நேற்று யாழ். வந்து சேர்ந்தார்.

தற்போது யாழ்ப்பாணம் கண்டி வீதியில், பஸ்தியன் சந்தியில் உள்ள வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை விடுதியில் தங்கியுள்ள கல்வி அமைச்சுச் செயலாளரையாழ்.மாவட்ட ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித்துறைசார் அதிகாரிகள் தங்கள் பிரச்சினைகள் குறித்து தினசரி காலை 8 மணி முதல் 9 மணி வரையும் மாலையில் 5 மணி முதல் 7 மணி வரையும் சந்தித்துப் பேசலாம் எனத்தெரிவிக்கப் பட்டது. [உ]

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

கல்வியங்காடு பொதுச் சந்தைக்கு அருகே அமைந்துள்ள வன்னியசிங்கம் படிப்பகம் நாளை புதன்கிழமை மீண்டும் திறக்கப்படவுள்ளது.

'வன்னியசிங்கம் பொதுப் பணி மன்றம்' என்னும் புதிய பெயருடன் புனரமைப்புச் செய்வதற்காகவே படிப்பகம் மீண்டும் திறக்கப்படவுள்ளது. (ஐ)

# கண்ணீர் அஞ்சலி

புகழ் பூத்த இளைப்பாறிய ஆசிரியையும்,
கல்லூரிப் பரிசளிப்பு நிதிப் பங்காளரும்,
பழைய மாணவியுமாகிய

திருமதி

## செல்லம்மா குமாரசாமி

அவர்களது பிரிவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி பழைய மாணவர் திரு. கு. ஆனந்தவடிவேல், முன்னாள் கல்லூரி ஆசிரியை திருமதி த. அரிராசசிங்கம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயம் 2), கல்லூரி பிரதி அதிபர் திருமதி க. இரத்தினசபாபதி, பழைய மாணவ சங்க செயலாளர் திரு. கு. தங்கவடிவேல் மற்றும் பழைய மாணவி திருமதி இ. பாலச்சந்திரன் (ஆசிரியை) ஆகியோருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

(54449)

# புதிய வகுப்புகள் ஆரம்பம்

சிற்றிமிஷன் தென்னிந்திய திருச்சபையின் தொழிற்பயிற்சி நிலையத்தில் தட்டச்சு தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சு ஆங்கிலம் சுருக்கெழுத்து தையல் முதலான வகுப்புகளுக்கு புதிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கீழ்க் கண்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

திட்டப்பணிப்பாளர்,
41, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(54484) — திட்டப்பணிப்பாளர்

31ஆம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி

## தங்கச்சியம்மா கந்தையா

தோற்றம்: 02-09-1912 மறைவு: 01-03-1998

அன்பின் திருவுருவே! எம்மையெல்லாம் பேணிப் பாதுகாத்தீர்! உற்றார், உறவினர்களையெல்லாம் உபசரித்தீர்! வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினீர்! உங்கள் நினைவுகள் எங்கள் அன்பு நெஞ்சங்களை விட்டு நீங்காது அம்மா! தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

S. சித்திரன்
சாவகச்சேரி. — குடும்பத்தினர்

(54451)

உ
ஐங்கரன் துணை

# விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுவர வருடம் பங்குனி மீ 18 ஆம் நாள் (01-04-98) புதன்கிழமை பஞ்சமி திதியும் ரோகிணி நக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9.00 மணி முதல் 10.35 வரையுள்ள இடபலக்கின சுப முகூர்த்தத்தில்

மணமகன்
பிரம்மஸ்ரீ கதிர்காமக் குருக்கள் தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
பிரம்மஸ்ரீ
க. கிருஷ்ணேஸ்வர சர்மா
அவர்களுக்கு
(புற்கை தின்னி பிள்ளையார் ஆலயம் கூளாவடி)

மணமகள்
பிரம்மஸ்ரீ பாஸ்கரக் குருக்கள் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
செல்வி பா. சிவசோதி
அவர்களை

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் செய்து வைப்பதற்கு நிச்சயித்திருப்பதால் அச்சமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

சமாவர்த்தனம்:- 01-04-1998 ஈசுவர வருடம் பங்குனி 18 ஆம் நாள் அதிகாலை 5.15 மணி முதல் 7.00 மணி வரை (மணமகன் இல்லம்)

மாங்கல்ய தாரணம்:- 01-04-1998 காலை 9.00 மணி முதல் 10.35 மணி வரை (மணமகள் இல்லம்)

வதுவர கிரஹப்பிரவேசம்:- வரவேற்பு உபசாரம் 01-04-1998 3.00 மணிக்கு மேல் (மணமகன் இல்லம்)

குறிப்பு:- மணமகள் இல்லம்:- மகேஸ்வரா இல்லம், நவாலி றோட், ஆனைக்கோட்டை.

இவ்வண்ணம் இரு வீட்டார் அழைப்பு.

| மணமகன் இல்லம்: | மணமகள் இல்லம்: |
|---|---|
| பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய கதிர்காமக் குருக்கள் தம்பதிகள் | திருமதி பாஸ்கர குருக்கள் |
| பிரம்மஸ்ரீ சோ. நடேசசர்மா தம்பதிகள் (கொழும்பு) | பிரம்மஸ்ரீ பா. சிவசர்மா தம்பதிகள் |
| பிரம்மஸ்ரீ இ. கௌரீஸ்வரசர்மா தம்பதிகள் (ஆனைக்கோட்டை) | கொடிகாமம் மத்தி, |
| பிரம்மஸ்ரீ க. நாகேஸ்வரசர்மா தம்பதிகள் (பருத்தித்துறை) | கொடிகாமம். |

— சுப மங்களம் —

மூத்தவிநாயகர் கோயில்,
ஆனைக்கோட்டை.

(சி/3259)


# இதோ, புதியதோர் அறிமுகம்!

COMMERCIAL BANK

## கொமர்ஷல் வங்கி அறிமுகப்படுத்தும் சிறுவர்களுக்கான

புதியதொரு சேமிப்புத் திட்டம்

# "அருணலு"

எதிர்வரும் 03 - 04 - 1998 முதல் யாழ். கொமர்ஷல் வங்கியில் நடைமுறைக்கு வருகின்றது.
17 - 04 - 1998 வரை இத்திட்டத்தில் இணையும் சிறுவர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்படும். (சி/3256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)
டிருந்த காரைநகர் வேலணைப் பகுதியைச் சேர்ந்த 151 பேர் பேசாலைச் சிறையில் இருந்து கடந்த 23 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்களும் திருகோணமலை உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் எதிர்வரும் புத்தாண்டு தினத்துக்கு முன்னர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று திருமலைச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-9)


### Generator for Sale
ஜெனரேட்டர் விற்பனைக்கு

**DONGFENG**
1 -- hr Rating
Out Put 9.7 KW/ 2000r/ Min

**A.C. Synchronous Generator**
Single Phase 50/ 60 Hz
KVA 1500/ 1800r/ Min
KWA 5
Made in China

Contact:
UTHAYAN,
361, Kasthuriar Road,
Jaffna.

(C/3258)



# DCS
## 2000 Scholarships Scheme Competitive Examination 98 99

**DCS**
DATA CONNECTION SYSTEM (PVT) LIMITED

Admission Cards for the above Examination have been posted to all applicants.

The Examination will be held on Sunday, 5th April from 10-30 a.m. to 11-30 a.m. at:

1. Hindu Ladies College, Jaffna.
2. J/Vembady Girls' High School, Jaffna.
3. Jaffna Central College, Jaffna.

Applicants must sit the Examination only at the centre indicated in their Admission cards.

Anyone who has not received the Admission Card should contact the undersigned immediately at the DCS office with proof of having paid the Application Fee (receipts issued by the DCS, Jaffna or post office receipts in the case of Money Orders sent by Registered Post)

Director (Ad.),
DCS,
124/2, Palaly Road,
P.O. Box 144
Thirunelvely.

(54423)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா முருகேசு

உடுவிலைப் பிறப்பிடமாகவும், நெடுங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா முருகேசு நாவற்குழியில் 27-03-98 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு A. D. முருகேசு (ஓய்வு பெற்ற ஆசிரியர், நெடுங்கேணி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், திருஞானரத்தினம், திருச்செல்வரத்தினம், திருயோகரத்தினம்(சுகாதாரப் பணிமனை K. K. S. ), திருச்சோதிரத்தினம் (அரசினர் வைத்தியசாலை, நெடுங்கேணி), மேரிறோசலீன், திருச்சிங்கரத்தினம், ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, ஜெயமலர், ஜெசிந்தாதேவி, செல்வராணி, சிவலிங்கம், ஜெயகௌரி, திரவியநாயகம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28-03-98 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம.மகிழ்ராஜா [பேராமகன்]
(ஜேர்மனி)
ம.புனிதவதி [பேராமகள்]
சு.மகேந்திரன் [மருமகன்]

கோண்டாவில் கிழக்கு. (50010)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறை வேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


## தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்)
நினைவிடத்தில் நடைபெறும். இதில் நாதஸ்வர இசை நிகழ்வுகள் மத வழிபாடுகள், ஆசியுரைகள், நினைவுரைகள் என்பன இடம்பெறும்.

செல்வா நூற்றாண்டு நிறைவையொட்டி புளொட் அமைப்பினரும் பல நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர். அவர்கள் இன்று யாழ்.ஆஸ்பத்திரியில் இரத்த தானம் வழங்கவுள்ளனர்.

வவுனியா இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையிலும் இன்று நண்பகல் 11 மணிக்குத் தந்தை செல்வாவின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இடம்பெறும். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகரசபைத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9-164)

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)
களுக்குச் செல்ல அனுமதி கிடைக்காதது குறித்து குழுவினர் கவலை தெரிவித்தனர்.

நல்லெண்ணக் குழு உறுப்பினரான மாலிம்பொத பிரதேச சபைத் தலைவர் ஞான சிறி விதானகே தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்குச் செல்ல ஆர்வம் உண்டு. ஆனால் அதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டிருப்பதால் இது பற்றி எம்மால் உடனடியாக முடிவு எடுக்க முடியவில்லை. அரசு அனுமதி வழங்குமானால் எமது அடுத்த கட்ட விஜயம் புலிகளின் பகுதிகளுக்கான விஜயமாக அமையும். நல்லெண்ண நடவடிக்கையாக தென்பகுதிக்கு வருமாறு மட்டக்களப்பு தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். இருதரப்புப் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வைத்தான் பலரும் வற்புறுத்துகின்றனர் — என்றார்.

நல்லெண்ணக் குழுவினரை வரவேற்கும் வைபவம் ஏறாவூர் பிரதேச சபை மண்டபத்தில் தலைவர் மௌலவி ஏ. ஸி. அப்துல் மஜித் தலைமையில் நடைபெற்றது. ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் செய்யது அலி சாகிர் மௌலானாவும் அதில் கலந்து கொண்டார்.

இக்குழுவினர் தமது விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று மாத்தறை திரும்புகின்றனர். (ஐ-21)

## கல்விப்...

(முதலாம் பக்கத் தொடர்)
னம்மூலம் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் — என்றும் —

நாளை மறுதினம் கொழும்பில் அஞ்சலிக்கு வைக்கப்படும் பூதவுடல் அடுத்த நாள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என்றும் —

யாழ். கல்வித் திணைக்கள வலயம் 1 அலுவலகத்தில் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின்னர் அவரின் சொந்த ஊரான வேலணையில் இறுதிக்கிரியைகள் நடைபெறும் எனத்தெரியவந்தது. (உ-15-51-139)


எமது புதிய வெளியீடு!

ப்ரியாராமனின்
★ அசுரவம்சம்

[illegible] வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3262)


## கண்ணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்)
காரிகள் முன் வந்துள்ளனர். இந்த அமைப்பின் அதிகாரிகள் இங்கு வந்து ஆய்வு செய்து சில இடங்களை இனங்கண்டும் உள்ளனர்.

அந்த இடங்களில் அவற்றை அகற்றுவதில் பாதுகாப்புப் படையினருக்கு சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தொடர்ந்து நடத்திய பேச்சுக்களை அடுத்து குறிப்பிட்டசில இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் அவற்றை அகற்ற பாதுகாப்பு அமைச்சு அனுமதி தந்துள்ளது.

விரைவில் கண்ணி வெடி அகற்றும் நிபுணர்கள் இங்கு வந்து அவற்றை அகற்றும் பணியை ஆரம்பிப்பார்கள்— என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3-9)

## இன்று

நீர்வேலி வாய்க்கா[ல்] தரவை பிள்ளையார் கோ[வி]லில் இன்று செவ்வா[ய்]க்கிழமை முதல் 10நாள்களு[க்கு] இலட்சார்ச்சனை நடை பெறவுள்ளது. (ஐ-110

## கொழும்பில்..

(முதலாம் பக்கத் தொடர்)
விரைவில் மழை பெய்யாவி[ட்]டால் குடி தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடி[ய] அபாயம் இருப்பதாகவு[ம்] தேசிய நீர் வழங்கல், கழி[வு] நீர் அகற்றும் துறையின[ர்] தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவிவருகி[ன்ற] 'எல்நைனோ' காலநிலை[யே] இவ்வாறு வரட்சி ஏற்பட[க்] காரணமாக அமைந்துள்[ள]தாக வானிலை அவதா[ன] நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-9

## இனப்பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்)
பாய்க்கு இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய விடயங்கள் வருமாறு:-

சிறிலங்கா அரசின் படைகள் தமிழர்களைப்பல வழிகளிலும் வதைத்து வருகின்றன.

தமிழ் மக்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன. நீதியான, நியாயமான அரசியல் தீர்வு மூலமே அதனைத் தீர்க்க வேண்டும். இராணுவ நடவடிக்கை மூலம் அல்ல என்ற கோசத்துடன் பதவிக்கு வந்த ஓர் ஆட்சியின் கீழ் சமீப காலத்தில் இந்நிலைமை படு மோசமடைந்துள்ளது.

தங்களின் அரசியல் இலாபங்களுக்காக தமிழர்களைப் பகடைக்காய்களாகவே ஐ. தே. கட்சியும், பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் பாவித்து வந்திருக்கின்றன; பாவித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழர்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதப் படுத்தும் நோக்கம் அவர்களுக்கு சற்றும் கிடையாது.

இந்த நாட்டுத் தமிழரின் அபிலாஷைகளைத் திருப்திப் படுத்தும் சுமுகமான அரசியல் தீர்வை இந்தக் கட்சிகள் இரண்டில் எந்த ஒன்றிடம் இருந்தும் பெறலாம் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர்.

கொலைகள், கற்பழிப்புகள், மானபங்கப்படுத்துதல், அநாவசியக் கைதுகள், தடுத்து வைப்புக்கள் போன்றவை தமிழ் மக்கள் மீது வயது, சுகநிலை, பால், என்ற எந்த வித வேறுபாடும் இன்றித் தொடர்ந்தும் மே[ற்] கொள்ளப்பட்டு வருகின்ற[ன].

இலங்கைத் தமிழர் என்ற ஒரே காரண[த்தி]லேயே இத்தகைய செ[யல்]கள் அவர்கள் மீது கட்[ட]விழ்த்து விடப்பட்டுள்ளன.

சொல்லொணா-பொறு[க்க] முடியாத — நஷ்டங்கள் - இழப்புகள் தமிழருக்கு ஏ[ற்] பட்டிருப்பதுடன் அவர்க[ள்] மன, உடல் நிலைகளும் ப[ல] விதங்களில் பாதிப்புகள்தா[க்]கங்களுக்கு உட்பட்டு[க்] கொண்டிருக்கின்றன.

ஆயிரக் கணக்கானோர் பிற நாடுகளுக்குப் போ[ய்] விட்டார்கள்.

இந்துமதக் குருமாரு[ம்] தமிழ் அரச உத்தியோகஸ்[த]ர்களும் சமீபத்தில் கண்[மூடி]த்தனமாக கைது செய்[ய]ப்பட்ட போது கொழும்[பி]ல் உள்ள தங்களின் தூ[தா]ரின் கவனத்துக்கு அதனை[க்] கொண்டு வந்தோம்.

பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் மனமுடைந்[து] வாழ்கின்றனர். இளம் சிறா[ர்] களின் மனப்பாங்கும் ப[டு] மோசமாகப் பாதிக்கப்ப[ட்] டுள்ளது.

மத்திய வகுப்பு, வருவா[ய்] குறைந்த தமிழ் மக்கள் இ[ந்]தியாவில் தான் நிம்மதியை தேட முடியும். ஆனால் அ[வர்] கள் தென்னிந்தியத் திரு[த்]தலங்களுக்கு யாத்திரை செய்வதற்கு "[illegible]" பெ[று]வதே பெரும் கஷ்டமாக உ[ள்] ளது. அவர்கள் நிம்மதி பெ[ற] வசதி செய்யும் விதத்தில் த[மி]ழர்கள் மீதான "விசா" நிபந்தனைகளைத் தளர்த்[து]மாறு கோருகின்றோம், என்று தெரிவிக்கப்பட்டு[ள்] ளது. (ஐ-உ-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவியான செல்வி
காவேரி இரத்தினராஜா
அவர்களின் தந்தை

### சு. இரத்தினராஜா

அவர்களின் மறைவு குறித்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

மாணவர்கள்,
டிப்ளோமா இன் இங்கிலிஷ்
உயர் தொழில் நுட்ப நிறுவகம்,
திருநெல்வேலி,

( 54454 )

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளரும் கல்வித் திணைக்கள நலன்புரிக் கழகத்தின் காப்பாளருமான பாசமிகு

### உயர்திரு. சு. இரத்தினராசா

அவர்கள் 30-03-98 இல் காலமானதையிட்டு நாம் அதிர்ச்சி அடைவதுடன் ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம். அன்னாரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்வித் திணைக்கள நலன்புரிக்கழகம்.

(54455)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org